16146

மலர் கன்யா.

தொகுதி 2. பகுதி 1-

பகுதி 2.

ஏப்ரல் May 1937 — June 1937

1079

[பகுதி 1

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

1644

ஈஸ்வர ௵ சித்திரை மீ
APRIL & MAY 1937

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

பொருளடக்கம்

பக்கம்

1. தனிமுறையில் பாஷர்பி விருத்திக்கேற்ற உபகரணங்களும் அப்பியாசங்களும் 1
—எஸ். ஜெகன்னாதன்

2. ஆரம்பக் கல்வி 18

3. ஆசிரியர்களும் விடுமுறை நாட்களும் 19
—கீழ்நகர் சி. சந்திரசேகரன், M.A.,L.T.,

4. குழந்தைகளின் கை வேலை 22
—K. N. சாரி

5. சில ஆச்சரியக் குறிப்புகள் 25

6. பத்திராதிபர் குறிப்புகள் 26

7. இந்தியச் செய்திப் படம் ... .

9. இரக்ஷணைப் படம் ....

கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. டூல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

V. S. Venkataraman & Co.

PUBLISHERS

KUMBAKONAM

OFFICE 7-JUN 1937

GIVE THE CHILDREN OF THE MOTHERLAND

The Benefit of the Best Books

BALAR TAMIL VACHAKAM

Books II to V

GOKHALE TAMIL READERS

I to VIII

REFORMED SERIES IN ARITHMETIC

I to IV

For our other useful Publications

ask for our detailed

CATALOGUE

147643

சென்னை-600 008.

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

The Coronation English Readers

Edited by Prof. J. C. ROLLO, M.A.

Principal, Maharaja's College, Mysore

Primer, Part I	(3rd Class)	Annas 3
Primer, Part II	(4th Class)	Annas 3
Primer, Parts I & II		Annas 6
Book I	(5th Class)	Annas 6
Book II	(1st Form)	Annas 8

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

B. G. PAUL & Co., Educational Publishers

12, Francis Joseph Street, G.T., MADRAS

Children's Everyday Science in Tamil

FOR FORMS II & III. EACH AS. 12.

BY M. S. SUBRAMANIAN,

TEACHER, HINDU SECONDARY SCHOOL, VIRANALLUR S.I RY.

Neatly got up, conforming to the latest syllabus in General Science, in elegant and flowing Tamil, with rare photographs, pictures, and diagrams in profusion, in bold print, highly inviting to young children, and appreciated by eminent educationists, scholars, scientists, etc., etc.

Sir C. V. Raman, Director, Indian Institute of Science, Bangalore, writes ....have been very favourably impressed with the variety of the materials and the freshness of the treatment.........

Mr. M. S. Sabhesan, M.A., Professor of Botany, Christian College, Madras, writes.........One can have no doubt about the merit of a school book if the pupil for whom it is intended is absorbed in its study and disinclined to part with it. This is just what I saw in the case of the series, "Children's Everyday Science" brought out by Mr. M. S. Subramaniam.........is well planned and the topics are clearly explained.........

JL

T1SM 21, N36PA N37.2.1-2

சென்னை-600 008.

THE PEOPLE'S ... 7 JUN 1937 MADRAS

பாலர் கல்வியின் இரண்டாம் தொகுதி தொடங்குகைக்கு பெரியாரின் நற்செய்திகள்

The S. I. T. U. is a Provincial Organisation of Teachers of all grades; but hitherto the Elementary section of Education has not been given the importance it deserves in the activities of the S. I. T. U. It is only recently that we have realised our duty to our brethren engaged in the great task of imparting Elementary Education to the masses of our land. The *Balar Kalvi* which we have started tries to do something for them. Both the academic and the professional of Elementary Education are given equal importance in our journal. I hope the vast body of Elementary Teachers will realise the importance of a journal like that and they and the enlightened members of management will support the journal and make it their mouthpiece. I wish the *Balar Kalvi* success and a career of increasing usefulness.

S. K. YEGNANARAYANIER,

President, S. I. T. U.

* * * *

ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், சென்னை நூல் நிலைய சங்கத் தலைவர்.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் அன்புகூர்ந்தனுப்பிய 'பாலர் கல்வி' என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் இரண்டு பகுதிகளையும் பார்வையிட்டேன். நமது நாட்டுக் குழந்தைகளுடைய நலத்தை முதல் நோக்கமாகக் கொண்டு தங்கள் பத்திரிகை நடைபெற உத்தேசித்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

குழந்தைகள் ஆவலுடன் படிக்கக்கூடிய எளிய பாடல்களும் அவர்கள் கண்களைக் கவரத் தக்க படங்களும் அவர்கள் அறிவுக்கு எற்ற சிறந்த விஷயங்களும் தங்கள் பத்திரிகையில் உள்ளன. முக்கியமான செய்திகளை படங்கள் மூலமாகத் தங்கள் பத்திரிகை தெரிவிப்பதினால் குழந்தைகள் அச்செய்திகளை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்கள்.

தங்கள் பத்திரிகையிற் காணப்படும் போதனைமுறை விஷயங்கள் பிரதம கலாசாலை ஆசிரியர்களுக்கு மிகவும் பயன் படுமென்று நினைக்கிறேன்.

சென்னை நூல்—நிலயப் பிரசாரத்தின் முழு நோக்கம் கல்வியறிவைத் தமிழ் நாட்டிற் பரவச் செய்யவேண்டும் என்பதே யாம். இந்த நோக்கத்தைத் தங்கள் பத்திரிகையும் ஒருவாறு நிறைவேற்ற முயல்வது கண்டு நான் மிகவும் திருப்தியடைகிறேன்.

தங்கள் பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தியடைந்து தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கும் அவர்கள் ஆசிரியர்களுக்கும் பெரும்பயன் அளித்து வருமென்று நம்புகிறேன். கல்வித்துறையில் உழைத்து வருப வர்கள் தங்கள் பத்திரிகைக்கு வேண்டும் ஆதரவளிப்பது உசிதமென்று எண்ணுகிறேன்.

* * * *

Dr. Mason Olcott, Vellore, writes :—

Our supervisors of village schools have found *Balar Kalvi* most useful. Best wishes for the years ahead.

* * * *

Rev. Milton G. Kuolt, M.E.L.I.M., Ambur, writes :—

It is a matter of keen satisfaction to me that the Tamil Magazine, *Balar Kalvi*, has rounded out a year of successful achievement. There is no doubt in my mind that it has filled a need in the Tamil field. I sincerely hope that it can soon be extended to other language areas also.

During the past year the magazine has been appreciated by a large number of teachers in village schools of our Mission; it has been studied by the Higher Elementary and Secondary Training sections and staff of our High and Training School; and has had points of interest also for other students studying in our school.

It is my hope that the magazine may continue to flourish and improve itself in contents and circulation, and improve the profession in South India.

* * * *

வே. ஸாரநாத அய்யங்கார், திருச்சி நாஷனல் காலேஜ் தலைவர்.

தாங்கள் அனுப்பிய 'பாலர் கல்வி'யின் ஏப்பிரல் மாத சஞ்சிகையைப் பெற்று மகிழ்வடைகிறேன். புதிதாய் உண்டாகப்போகும் இரண்டாம் தொகுதிக்கு ஒரு மங்கள வார்த்தை அனுப்பவேண்டுமாறு தாங்கள் என்னைக் கேட்டுக் கொண்டதில், யான் ஒரே ஒரு கருத்தைத்தான் வெளியிட விரும்புகிறேன். நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலுள்ள குறைகளைத் தீர்ப்பதற்குப் பணம் வேண்டும், மேல் பார்வை வேண்டும், சமூக நிருவாகச் சிறப்பு வேண்டும் பொது ஜனங்களின் பகுத்தறிவு வேண்டும்; மேலும் இத்துணையாவற்றிலும் சிறந்ததான ஆரம்ப ஆசிரியனின் மாசற்ற சிரத்தையே நிரம்பவேண்டும். ஆரம்ப ஆசிரியனன்றி ஆரம்பக் கல்வி உலகத்தில் அணுவளவும் அசையாது. பாலிய சிக்ஷை மிகவும் கடினமான வேலை; அதை ஏற்றுக்கொண்டு ஆசிரியர் சுயதரும பரிபாலனம் செய்வதற்குத் தாங்கள் நடத்திவரும் 'பாலர் கல்வி' பத்திரிகை மிகுந்த உதவி அளித்து வருவது போற்றத் தக்கதே.

Rev. H. A. பாப்ளிதுரை, லண்டன் மிஷன், ஈரோடு.

பத்திராதிபர் வேண்டுகோளுக்கிணங்கி யான் 'பாலர் கல்வி' என்னும் பத்திரிகையின் முதல்வருஷ விழாவின் வைபவத்திற்கு அதிக மகிழ்ச்சியுடன் என் மனமார்ந்த நல் மொழியைத் தெரிவித்தனுப்பியுள்ளேன்.

ஆரம்பம் முதற்கொண்டு நான் இப்பத்திரிகையைப் பெற்று வாசித்துள்ளேன். அதில் கண்ட வியாசங்களும் கட்டுரைகளும் ஆசிரியர்களுக்கு மிகவும் பிரயோசனமானவை என்பதற்கு ஐயமின்றே. போதனு முறைகள் அநேகமாக மாறிப்போகும் இக்காலத்தில் ஆசிரியர்மாருக்கு விசேஷமாய் புதிய வழிவகைகளைக் கண்டறியும் நூற்களும் பத்திரிகைகளும் அவசியம் வேண்டியது. 'பாலர் கல்வி' என்னும் பத்திரிகை இவ்வாறு உதவி செய்து வந்தது என்று நான் உணர்ந்தேன். ஆதலால் அதின் பத்திராதிபர்க்கு நம்முடைய ஆசிரியர் சார்பாக நாம் மனமார்ந்த வந்தனத்தைக் கூறவேண்டும். கிராம ஆசிரியருக்கேற்ற தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது என்று கண்டு மகிழ்ந்தேன்.

இப்பத்திரிகை அநேக விஷயங்களில் ஆசிரியர்களுக்கு போன வருஷத்தில் நல்ல உதவி செய்தாயிற்று என்று அறிந்து அதன் இரண்டாம் வருஷ சஞ்சிகைகள் அவ்வாறே, அல்லது அதிலும் நல்லவாறே, பல நல்ல வியாசங்களை வெளியிட்டுவரும் என்று நம்புகிறேன். நான் பத்திராதிபருக்கும் மற்றுள்ள வேலை செய்வோர்க்கும் இவ்விரண்டாம் வருஷ வாழ்த்துதலை தெரிவித்துள்ளேன்.

* * * *

G. A. Pearce, Joint Principal, Buckingham & Carnatic Mills School, Perambur, writes :—

The monthly journal *Balar Kalvi* published by the South India Teachers' Union is undoubtedly a valuable guide for teachers. The various aspects of Elementary Education are well discussed, and a good way out of the difficulties, generally felt by the teachers handling Kindergarten classes, is laid out. The well-planned illustrative pictures and drawings on "Safety First" and handicraft are indeed a valuable gift for children and others as well.

This journal is certainly a good asset for teachers and pupils in elementary schools.

* * * *

Mr. R. Swaminatha Iyer, retd. Headmaster, Kumbakonam, writes :—

The journal has been well designed with a very laudable purpose in view and it behoves, I think, the management of every elementary school, public or private, to subscribe for a copy for the benefit of the teaching staff. Of course the Editorial Board will see to it that their journal really caters for the needs of the elementary teachers, so as to command wide enough support.

It goes without saying that teachers, in general, are poor and can ill afford to go in individually for teaching aids and appliances for improving their teaching. They should however realize the nobility of their calling and, availing themselves of every aid within their reach, endeavour to be up-to-date both in their knowledge of school subjects and methods of work. They should proceed to their work in the school fully equipped, as though they were going to a temple for worship, and throw themselves heart and soul into it. Outside the school they should be friends and guides to the general public as well as to the parents of the school children in all matters of uplift, educational and economic, as far as their own capacity and leisure may allow. In fine, their life and work must be thoroughly exemplary, calculated to shed lustre upon their very profession.

There is, as everybody knows, nothing that makes for individual and social efficiency and advancement so much as education, general and special. Elementary education forming its groundwork needs in its organization every care and attention on the part of those who organize it. Unless the foundation is securely laid, the superstructure, however magnificent, would be but a house of cards. It is therefore the look-out of all, the state, local bodies and private managements, to see that the educational groundwork should be suitably arranged in every detail and every facility for good work afforded adequately to those engaged in it. Educational journals and appliances, refresher courses, suitable libraries, tenure of service and adequate salaries are among the many facilities needed for efficiency of teaching. *Balar Kalvi*, designed as it is to help elementary teachers in their day-to-day work, must be deemed a welcome addition to the necessary teaching aids for elementary schools and accorded a liberal support by all concerned. My heartfelt sympathy goes out to those in charge of it and I sincerely wish the journal long, long years of increasing usefulness and popularity.

* * * *

Rev. Fr. T. Gavan Duffy, Tindivanam, writes :—

Your paper has interested me from the beginning and shows an advance on previous publications of the same kind. It should be of real service to the elementary school teachers; and I shall be pleased to bring it to the attention of the three or four hundred teachers in our organisation, as soon as I am satisfied that it avoids the usual pitfall of mythology.



ஸி. ராஜகோபாலாசார்யார்
28-வது மாகாணக் கல்வி மகாநாடுத் தலைவர்.

இந்திய செய்திப் படம்

ஈஸ்வரனும் சித்திரைமீ



Their Imperial Majesties King George VI and Queen Elizabeth, whose Coronation will take place on the 12th May '37
(By courtesy of "The National Union of Teachers," England)

பாலர் கல்வி

சென்னை-600 008.

தொகுதி 2 | 1937 ஞு ஏப்ரல் - மே மீ ஈஸ்வர ஞு சித்திரை மீ | பகுதி 1

தனிமுறையில் பாஷாபி விருத்திக்கேற்ற உபகரணங்களும் அப்பியாசங்களும்

(எஸ். ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.)

முந்தின சஞ்சிகையில் பாலர் வகுப்பு அதாவது அஸ்திவார வகுப்பில் பிள்ளைகளுக்கு சந்தோஷம் உண்டு பண்ணக்கூடியவும் பாஷாபிருத்திக்கேற்றவுமான சில உபகரணங்களைக் குறிப்பிட நேர்ந்தது. அம்முறையை அனுசரித்தே படிப்படியாக பாஷையை வளர்த்திச் செல்லலம் விளையாட்டாகவுமிருக்கக்கூடிய சில பயிற்சிகளையும் அவைகளுக்கேற்ற உபகரணங்களையும் ஆராய்ந்தறிவது அவசியம். தனிமுறைப்படி ஒவ்வொரு பையனும் ஒவ்வொரு காரியத்தைச் செய்ய நேரிடுகிறது. அவனுக்கென்று, புஸ்தகமோ, அட்டையோ, கேள்விகள் எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு காகிதமோ மற்றும் ஏதோ ஒன்று தேவை. மனதினாற் படித்து கேட்ட கேள்விகளுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து வாயினாற் சொல்லச் செய்வதோ, காரியத்தினால் செய்து காட்டச்செய்வதோ அல்லது எழுதச்செய்யச் சொல்லுவதோ முறையாகும். மேலும் இவற்றை ஒழுங்குபெறச்செய்வதில் சில பரீக்ஷைகள் செய்துபார்த்து குழந்தைகள் எவ்விஷயங்களில் அதிகப் பிழைசெய்கிறார்கள், எப்பயிற்சி அதிகம் கொடுக்கப்படின் அக்குறைகள் நீங்கும், எனக் கண்டறிவதும் அவசியம். உதாரணமாக 'சொல்லுவதெழுதுதல்' பாடத்தில் அடியிற் கண்ட பிழைகள் தெரியலாயின.

1. ர, ற பேதங்களை அறியாமை.
2. குறில் நெடில் பேதங்களை அறியாமை.
3. ஒற்றுகளைச் சரியாக அமைப்பதில் அறிவீனம்.
4. எழுத்துப் பிழைகள்.

5. வடமொழி எழுத்துக்களைச் சரியாக எழுதத் தெரியாம லிருத்தல்.
6. உச்சரிப்புப் பிழையினால் நேரிடும் பிழை.
7. ன, ண வித்தியாசங்கள்.
8. கைப்பிழை.
9. தப்பிதமாக ஒற்றுகளைப் போடுதல்.
10. ர், ற் இவ்வொற்றுகளுக்குப் பின் தொடர்ந்து எழுத வேண்டு வதில் பிழைகள்.
11. வார்த்தைகளைத் தப்பிதமாகப் பிரித்தல்.
12. வார்த்தையின் நடுவில் நகரத்தை உபயோகித்தல்போன்ற பிழைகளே பெரும்பாலும் காணப்பட்டன.

பொதுவாக இவைகளை உச்சரிப்புப்பிழை, பாஷைப்பிழை, எழுத்துப் பிழை என்று மூவகையாகப் பிரிக்கமுடியும். இம் மூன்றும் ஒன்றிற்கொன்று நன்கு இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிழையைப் போக்கவும் நல்லதைப் புகட்டவும் பழக்கம் என்ற சாதனமே முதன்மையாகவிருக்கிறது. அப்பழக்கமானது பல மார்க்கங்களாகக் கொடுக்கப்படலாம்.

1. படித்துப்பார்.
2. நெட்டுருப்போட்டு ஞாபகம் வை, மனப்பாடம் பண்ணு)
3. திரும்பத் திரும்ப எழுது.

கைப்பழக்கமும் ஒரு பயிற்சியே.

இம்முறைகளை அனுசரித்துப் பழக்கம் கொடுப்பது சாதாரண வழக்கம். குழந்தைகளின் வயது, குணாதிசயம் இவைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பின் இவற்றை விட வேறு மார்க்கம் ஏதேனுமொன்றுண்டோ என்று யோசிக்கலானேன். பாஷையை அபிவிருத்தி செய்ய பாஷை தான் வேண்டும். அப்பியாசம் செய்துகொள்ள நாப்பழக்கம் வேண்டும். கைப்பழக்கம் கண் பழக்கம் செவிப் பழக்கம் நாப்பழக்கம் இவை ஒன்று சேருமின் நல்ல மனப் பழக்கமும் ஆகும் என்பது நூதன வித்தியார்த்தியின் கொள்கை. அதற்கேற்ப சில உபகரணங்களும் வேண்டும். கைப் பழக்கம் என்பது எழுதுதல் என்பது மாத்திரம் அன்று. வார்த்தைகள் எழுதிப்போட்டுள்ள ஒரு குவியல் அல்லது பெட்டியிலிருந்து தேவையானபடி வார்த்தைகளைப் பொறுக்குதல், சேர்த்து வைத்தல் ஜதை ஜதையாக வைத்தல், எதிர் எதிராக வைத்தல் பொருத்தமானவைகளைக் கூட்டிவைத்தல் இவைகளே யான் சொல்லும் கைப்பழக்கம் ஆகும். ஆரம்ப வகுப்பில் படத்தையும் வார்த்தையும் ஒன்று சேர்த்தல் என்பதையும் இக்கைக்கண்ட பழக்கத்தில் முதல் அப்பியாசமாகக் கொள்ளலாம்.

உ ப க ர ண ங் க ள்.

நான் எனது வகுப்பிற்கு அடியிற்கண்ட பிரகாரம் வார்த்தை அப்பியாசங்களைக்கொடுக்க மேற்கொண்ட பிள்ளைகளைக்கொண்டே அவைகளைத் தயார்செய்தேன். ஒவ்வொரு அப்பியாசத்தைச் சார்ந்த வார்த்தைகளையும் ஒரு பெட்டியில் போட்டேன். அவைகளைப் பிள்ளைகள் பெட்டியின்மேல் குறிப்பிட்ட பிரகாரம் பிரித்துவைக்கவேண்டும். பிறகு அவற்றை ஒருதரம் படித்துப் பார்க்கிறார்கள். இரண்டு பேர் சேர்ந்து ஒரு அப்பியாசத்தை முடிக்கிறார்கள். பெட்டியிலுள்ள வார்த்தைகளை சரியானபடி அடுக்கிவைக்கக்கூட ஒரு அட்டையும் உண்டு. சந்தேகம் வந்தபொழுது அந்த அட்டையை அவர்கள் பார்த்துக்கொள்ளலாம். இங்குள்ள 20 அப்பியாசங்களுக்கும் 20 பெட்டிகளும் 20 அட்டைகளும் தேவை.

1. குறில் நெடில்

குறில்	நெடில்	குறில்	நெடில்	குறில்	நெடில்
அடி	ஆடி	சட்டை	சாட்டை	பட்டி	பாட்டி
அடை	ஆடை	தடி	தாடி	படம்	பாடம்
கல்	கால்	பதி	பாதி	மடம்	மாடம்
கட்டு	காட்டு	பட்டை	பாட்டை	வண்டு	வாண்டு
சந்து	சாந்து	பல்	பால்	வலி	வாலி
சதி	சாதி	பட்டு	பாட்டு	வடை	வாடை

2. குறில் நெடில் (தொடர்ச்சி.)

குறில்	நெடில்	குறில்	நெடில்	குறில்	நெடில்
ஒடி	ஓடி	துக்கம்	தூக்கம்	முளை	மூளை
குட்டு	கூட்டு	திட்டு	தீட்டு	முட்டு	மூட்டு
குடம்	கூடம்	தொடு	தோடு	யுகம்	யூகம்
குடை	கூடை	புசி	பூசி	வில்	வீல்
கெலி	கேலி	பெட்டி	பேட்டி	விதி	வீதி
கொடு	கோடு	பொய்	போய்	விடு	வீடு
கொல்	கோல்	முட்டி	மூட்டி	விண்	வீண்

3. ல, ள வித்தியாசங்கள்.

ல	ள	ல	ள	ல	ள
அவல்	அவள்	சூலை	சூளை	வலம்	வளம்
கல்	கள்	தலை	தளை	வலை	வளை
கலம்	களம்	தவலை	தவளை	வால்	வாள்
கலை	களை	பாலம்	பாளம்	வெல்லம்	வெள்ளம்
காலி	காளி	புலி	புளி	வேலை	வேளை
காலை	காளை	மூலை	மூளை		
கோல்	கோள்	கொல்	கொள்		
சலி	சளி				

4. ல, ழ வித்தியாசங்கள்.

ல	ழ	ல	ழ	ல	ழ
பலம்	பழம்	பலி	பழி	மலை	மழை
பால்	பாழ்	இலை	இழை	கோலி	கோழி
வேலம்	வேழம்	குலை	குழை		

5. ல, ழ, ள வித்தியாசங்கள்.

ல	ழ	ள	ல	ழ	ள
கிலி	கிழி	கிளி	தலை	தழை	தளை
கலி	கழி	களி	வாலை	வாழை	வாளை
தாலி	தாழி	தாளி	விலா	விழா	விளா
வாலி	வாழி	வாளி	வலவல	வழவழ	வளவள

6. பதம், எதிர்ப்பதம்.

ஆரம்பம்	முடிவு	செங்கோல்	கொடுங்கோல்	மித்திரன்	சத்துரு
ஆதி	அந்தம்			மேடு	பள்ளம்
உத்தமம்	அதமம்	நல்லது	கெட்டது	வலம்	இடம்
ஒழுங்கு	கோணல்	நன்மை	தீமை	விழித்திரு	தூங்கு
கவனம்	அசட்டை	நல்லார்	தீயார்	வெளிச்சம்	இருட்டு
கூட்டாளி	பகையாளி	பணக்காரன்	ஏழை	ஜனனம்	மரணம்
சம்பத்து	தரித்திரம்	பிறப்பு	இறப்பு	மண்ணுலகம்	விண்ணுலகம்
		புத்தி	பேதமை		

7. பதம், எதிர்ப்பதம் (தொடர்ச்சி.)

1.

காலம்	அகாலம்	தைரியம்	அதைரியம்
கௌரவம்	அகௌரவம்	நீதி	அநீதி
சிரத்தை	அசிரத்தை	நியாயம்	அநியாயம்
சுசி	அசுசி	யோக்யன்	அயோக்யன்
சக்தி	அசக்தி	லக்ஷியம்	அலக்ஷியம்
சாத்தியம்	அசாத்தியம்	அறிவு	அறிவீனம்
சுத்தம்	அசுத்தம்	பக்தி	பக்திஹீனம்
சௌகரியம்	அசௌகரியம்	பலம்	பலஹீனம்
ஜாக்கிரதை	அஜாக்கிரதை	புத்தி	புத்தியீனம்
திருப்தி	அதிருப்தி	மதி	மதியீனம்

8. பதம் எதிர்ப்பதம் தொடர்ச்சி.

அதிர்ஷ்டம்	துரதிர்ஷ்டம்	சொப்பனம்	துர்ச்சொப்பனம்
குணம்	துர்க்குணம்	பலம்	துர்ப்பலம்
சகவாசம்	துர்ச்சகவாசம்	பழக்கம்	துர்ப்பழக்கம்
பாக்கியம்	துப்பர்பாக்கியம்	மணம்	துர்மணம்
புத்தி	துர்புத்தி	வாசனை	துர்வாசனை
போதனை	துர்ப்போதனை		

8. (தொடர்ச்சி.)

அபராதம்	நிரபராதம்	பயம்	நிர்ப்பயம்
ஆகாரம்	நிராகாரம்	பிரயோஜனம்	நிஷ்பிரயோஜனம்
களங்கம்	நிஷ்களங்கம்	ஆசை	நிராசை
ஜலம்	நிர் ஜலம்	சப்தம்	நிச்சப்தம்
ஜனம்	நிர் ஜனம்		

9. ஆண், பெண்.

ஆண்	பெண்	ஆண்	பெண்
அரசன்	அரசி	தகப்பனார்	தாயார்
அப்பா	அம்மா	தம்பி	தங்கை
அம்பட்டன்	அம்பட்டச்சி	தலைவன்	தலைவி
அண்ணன்	அண்ணி	தோழன்	தோழி
இடையன்	இடைச்சி	பணக்காரன்	பணக்காரி
இராஜா	இராணி	பாற்காரன்	பாற்காரி
உபாத்தியாயர்	உபாத்தியாயினி	பிதா	மாதா
எருது	பசு	பிள்ளை	பெண்
ஒட்டன்	ஒட்டச்சி	புதல்வன்	புதல்வி
காவற்காரன்	காவற்காரி	மகன்	மகள்
கிழவன்	கிழவி	மருமகன்	மருமகள்
குமாரன்	குமாரி	மாமன்	மாமி
குறவன்	குறத்தி	மாமனார்	மாமியார்
குசவன்	குசத்தி	வேடன்	வேடச்சி
சகோதரன்	சகோதரி	வேலைக்காரன்	வேலைக்காரி

10. ன, ண

ஊன்	ஊண்	கானல்	காணல்	பானம்	பாணம்
கனை	கணை	சுனை	சுணை	மனம்	மணம்
கன்	கண்	தனி	தணி	மனு	மணு
கனு	கணு	நான்	நாண்	மனை	மணை
கானம்	காணம்	பனி	பணி	வானம்	வாணம்

11. ஒரே இனத்தைச் சேர்ந்த மூன்று வார்த்தைகள்.

(1) பிர்மா	(6) கங்கை	(9) சுக்கு	(13) வெற்றிலை,
விஷ்ணு	கோதவரி	மிளகு	பாக்கு
சிவன்	காவேரி	திப்பிலி	சுண்ணும்பு
(2) சரஸ்வதி	(6) ஸத்தியலோகம்	(10) சேரர்	(14) வீணை
லக்ஷ்மி	வைகுண்டம்	சோழர்	புல்லாங்குழல்
பார்வதி	கைலாசம்	பாண்டியர்	மிருதங்கம்
(3) அன்னம்	(7) தேவர்	(11) சைவம்	(15) மரம்
கருடன்	மனிதர்	வைஷ்ணவம்	செடி
விருஷபம்	அரக்கர்	மாத்வம்	கொடி
(4) சங்கரர்	(8) வாழை	(12) மிருகம்	(16) சூரியன்
ராமாநுஜர்	மா	பக்ஷி	சந்திரன்
மத்வாசார்	பலா	பூச்சி	நட்சத்திரம்

12. ஒரே இனத்தைச்சேர்ந்த நான்கு வார்த்தைகள்.

(1)	ராமன்	லட்சுமணன்	பரதன்	சத்ருக்னன்
(2)	ரிக்	யஜுர்	ஸாம	அதர்வண
(3)	அப்பர்	சுந்தரர்	மாணிக்கவாசகர்	திருஞானசம்பந்தர்
(4)	இராமாயணம்	பாரதம்	பாகவதம்	ஸ்காந்தம்
(5)	ஸாமம்	தானம்	பேதம்	தண்டம்
(6)	ரதம்	கஜம்	துரகம்	பதாதி
(7)	கிழக்கு	மேற்கு	தெற்கு	வடக்கு
(8)	பிராமணர்	க்ஷத்திரியர்	வைசியர்	சூத்திரர்
(9)	தென்னை	பனை	ஈச்சை	பாக்கு
(10)	காய்	கனி	கிழங்கு	கீரை
(11)	நாகஸ்வரம்	தவுல்	ஜாலர்	ஒத்து

13. ஒரே இனத்தைச் சேர்ந்த ஐந்து வார்த்தைகள்.

(1)	தருமன்	பீமன்	அருச்சுனன்	நகுலன்	சகாதேவன்
(2)	சீதை	சாவித்திரி	ருக்குமணி	அகலிகை	த்ரௌபதி
(3)	சுவாமி	அம்மன்	பிள்ளையார்	சுப்பிரம்மணியர்	சண்டிகேசுவரர்
(4)	சிதம்பரம்	காஞ்சீபுரம்	காளஹஸ்தி	ஜம்புகேசுவரம்	திருவண்ணாமலை
(5)	ஆகாசம்	பூமி	காற்று	ஜலம்	நெருப்பு
(6)	பொன்	வெள்ளி	செம்பு	ஈயம்	இரும்பு
(7)	பச்சை	நீலம்	சிவப்பு	மஞ்சள்	வெள்ளை
(8)	கண்	காது	மூக்கு	நாக்கு	கை
(9)	தயிர்	பால்	வெண்ணெய்	கோஜலம்	கோமயம்
(10)	காலாட் படை	குதிரைப் படை	பீரங்கிப் படை	சமுத்திரப் படை	ஆகாயப் படை
(11)	தாமரை	ரோஜா	மல்லி	தாழம்பூ	சம்பங்கி
(12)	ஆசியா	ஐரோப்பா	ஆப்பிரிக்கா	ஆஸ்திரேலியா	அமெரிக்கா
(13)	காக்கை	கிளி	மைனா	குருவி	மயில்
(14)	குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
(15)	சிங்கம்	புலி	யானை	கரடி	சிறுத்தை

14. ஒரே அர்த்தத்தைக் தரக்கூடிய 3 வார்த்தைகள்.

(1) பசு	(6) அறிவு	(11) சாப்பாடு
ஆ	மதி	உணவு
கோ	புத்தி	ஆகாரம்
(2) உபாத்தியாயர்	(7) மனது	(12) போர்
குரு	உள்ளம்	சண்டை
ஆசிரியர்	அகம்	யுத்தம்
(3) அம்பு	(8) வீடு	(13) கிரீடம்
அஸ்திரம்	இல்லம்	முடி
பாணம்	அகம்	மகுடம்
(4) நெருப்பு	(9) கலியாணம்	(14) தீர்மானம்
தீ	மணம்	நிச்சயம்
அக்கினி	விவாகம்	முடிவு
(5) நாய்	(10) பிரகாசம்	(15) கருத்து
சுணங்கன்	வெளிச்சம்	எண்ணம்
சுவானம்	ஒளி.	நினைவு

15. ஒரே அர்த்தத்தைத் தரக்கூடிய 4 வார்த்தைகள்.

(1)	உண்மை	மெய்	நிஜம்	சத்தியம்
(2)	தெய்வம்	கடவுள்	ஈசுவரன்	ஈசன்
(3)	வீடு	அகம்	இல்லம்	மனை
(4)	தாமரை	சமலம்	பதுமம்	பங்கஜம்
(5)	கை	கரம்	பாணி	ஹஸ்தம்
(6)	குதிரை	பரி	அசுவம்	துரகம்
(7)	துணி	துகில்	ஆடை	வஸ்திரம்
(8)	அப்பா	தகப்பனார்	தந்தை	பிதா
(9)	அம்மா	தாயார்	அன்னை	மாதா
(10)	பயிர்த்தொழில்	வேளாண்மை	விவசாயம்	க்ருஷி
(11)	பாம்பு	அரவம்	சர்ப்பம்	நாகம்
(12)	வருத்தம்	துயரம்	விசனம்	துக்கம்
(13)	பகைவன்	விரோதி	எதிரி	சத்துரு
(14)	கணவன்	புருஷன்	நாதன்	நாயகன்
(15)	ஜனங்கள்	மக்கள்	பிரஜைகள்	குடிகள்
(16)	வேலை	கருமம்	காரியம்	பணி
(17)	சங்கதி	சமாசாரம்	விசேஷம்	செய்தி

16. ஒரே அர்த்தத்தைத் தரக்கூடிய 5 வார்த்தைகள்.

(1)	அரசன்	வேந்தன்	மன்னன்	பார்த்திபன்	பூபதி
(2)	காடு	அரணியம்	அடவி	கானகம்	வனம்
(3)	யானை	வேழம்	கஜம்	குஞ்சரம்	கரி
(4)	கடவுள்	தெய்வம்	ஈசுவரன்	இறைவன்	ஈசன்
(5)	குழந்தை	சிசு	குழவி	பாலன்	மகவு
(6)	கஜமுகம்	விநாயகர்	பிள்ளையார்	விக்னேசுவரர்	கணபதி
(7)	பிள்ளை	மகன்	புத்திரன்	குமாரன்	செல்வன்
(8)	புத்திரி	மகள்	குமாரி	செல்வி	பெண்
(9)	சினேகிதன்	அன்பன்	மித்திரன்	நேசன்	தோழன்
(10)	சுப்பிரமணியன்	குமரன்	முருகன்	ஆறுமுகம்	வேலன்

17. ர, ற வித்தியாசங்கள்.

அரம்	அறம்	கரி	கறி	பரவை	பறவை
அரை	அறை	கருப்பு	கறுப்பு	பாரை	பாறை
இரப்பு	இறப்பு	குரை	குறை	மரம்	மறம்
இரை	இறை	துரவு	துறவு	விரைத்தல்	விறைத்தல்
உரை	உறை	நிரை	நிறை		

18. எ, ஏ, ஒ ஓ (ெ) (ே) (ெ-ர) (ே-ா) | வித்தியாசங்கள்.

கொட்டை என்பதை கோட்டை என்றும், கேட்டை என்றும் கெட்டி என்பதை கொட்டி என்றும் தப்பிதமாக எழுதுவது சகஜமாக விருக்கிறது. இவைகளை சரியாக எழுதப் பழக்கம் ஆரம்ப வகுப்பிலேயே கொடுக்கப்படவேண்டும். அங்கு கவனிக்கப்படாவிடின் அப்பிழைகள் நீடித்து நிற்க வாரம்பிக்கின்றன. எழுத்துப் பிழையால் சொற்பிழையும், பாஷைப் பிழையும் உண்டாகிவிடுகின்றன. அடியிற் கண்ட வார்த்தைகளை எழுத அப்பியாசம் கொடுக்கவும்.

A.	கெடு	கேடு	கொடு	கோடு
	கெட்டி	கேட்டி (கிணறு)	கொட்டி	கோடி (கூட்டம்)
	கெட்டான்	கேட்டான்	கொட்டான் (கொட்டாப்புளி)	கோட்டான்
	கெட்டல்	கேட்டல்	கொட்டல்	கோட்டல் (வளைவு)
B.	———	தேடு	தொடு	தோடு
	———	கேள்	கொள்	கோள்
	———	கேட்டை	கொட்டை	கோட்டை
	———	தேற்று	தொற்று	தோற்று.
C.	கெடி	———	கொடி	கோடி
	நெய்	———	நொய்	நோய்.
D.	கெலி	கேலி	———	கோலி
	பெட்டி	பேட்டி	———	போட்டி
	தெள்	தேள்	———	தோள்
	நெற்று	நேற்று	———	நோற்று
E.	கெட்டு	கேட்டு	கொட்டு	———

19. A. விடுகவிகள்.

அடியிற்கண்ட விடுகவிகளைப்படி. படங்களைப் பார்த்து விடுகவிகளுக்குச் சரியான விடையைக் கண்டுபிடி.

1. கருப்புச்சட்டைக்காரன் காலையில் எழுந்திருப்பான்; தெருத் தெருவாய் ஓடி தோட்டி வேலை செய்வான். ஒருவனைக் கூப்பிட ஊராரை அழைப்பான். ஒண்ணரைக்கண்ணன் உற்றுப் பார்ப்பான் வீதையைக் கொத்தி ஸ்ரீராமர் சாபம் ஏற்றான் அவன் யார் ?

2. சின்னஞ் சிறு சமுத்திரத்திலே சிங்காரவீரர் நீந்திவாரார் அமிழ்ந்து அமிழ்ந்து மேலே வாரார். யார்க்கும் பயப்படா வீரர் செம்படவர் வலையில் சிக்கிடுவார். மேலே பறந்துவரும் பெருமான் போட்டிக்கு வாரார். அது யார் ?

3. ஆடும்போது சீறும் ஆடிக் குடத்திலடையும் மூடித்திறக்கும் போது முகத்தைக் காட்டும். அது என்ன ?

4. முக்கண்ணன் சிவனே அல்ல காய்கனி தின்றான் கட்டைகளைத் தின்பான் ஒன்று ஒன்றாய் இருந்ததெல்லாம் ஒன்று கூட்டும் உத்தமன் இவனே. அவன் யார்.



5. மாடு இரண்டு இழுத்துவரும் வண்டியல்ல ஒருவன் ஓட்டிவர நொய் என்று கத்திவர நெய் உருகிவர, சக்கை எல்லாம் பிழிந்துவர அது என்ன ?

6. பெட்டியாவது பெட்டி நூதனமான பெட்டி முறுக்கிவிட சங்கீதம் பாடும் பெட்டி. கேட்காத பாட்டுகள் பார்க்காத பாடகர்களும் ஒலிந்திருக்கும் பெட்டி கேலிக்கை கூத்துகளும் வேடிக்கை விகடங்களும் செய்திடும் பெட்டி அது என்ன பெட்டி ?

19. B. விடுகவிக்குச் சரியான விடையைக்காட்டும் படத்தைப் பார்த்து அதற்கு நேர் சரியான விடுகவியை எழுது.

(1) மூக்கு இல்லாமல் மூச்சு விடுவான்.
உயிரில்லாமல் உயிர்களைச் சுமப்பான்.
வாயில்லாமல் கரியை விழுங்குவான்.
பாதையெல்லாம் இரண்டு கோட்டினூலே
பாதத்தில் பதிந்தால் பாதாளமே.

(2) காட்டிலே வெட்டின கட்டையெல்லாம் கடலோரம் மிதக்கிறது
கடலிலே காற்றுபங்களா கட்டி கடலிலே மிதக்கவிட்டான்.
தண்ணீரைக் கிழித்துச் செல்லுகிறது.
காற்றைக் கண்டால் தள்ளாடிச் செல்லுகிறது.
நாட்டாரைத் தூக்கி நகரத்துச் சீமைக்குச் செல்லுகிறது.

(3) கிர்கிர் என்று சத்தம்கேட்கிறது. மோட்டார் அல்ல,
உயரப்பறக்கிறது கருடனே யல்ல,
ஆளைச்சுமக்கிறது மூட்டையைச் சுமக்கிறது
கடலைக் கடக்கிறது மலையைத் தாண்டுகிறது
நாட்டை அடைந்து நகரத்து ஜனங்களை இறக்குகிறது.



(4) சுவரிலும் ஏறுவான், கூரையிலும் தவிழ்ந்து செல்வான்
கண்டவிடத்தில் கொசுவைப் பிடிப்பான்
இருக்கும் இடம்போல் நிறம்மாறிக் காட்டுவான்
ஆரூடத்தில் நல்ல ஜோதிடன் இவனே, அவன்யார்

(5) காலையிலே கத்தும் பக்ஷி
கந்தன் கொடியிலிருக்கும் பக்ஷி
குப்பையைக் கிளறும் பக்ஷி
கொண்டை ஒன்றுடைய பக்ஷி. அது என்ன ?

(6) நாலுலக்கை குத்தி வர
இரண்டு முறம் புடைத்துவர,
துடுப்பு துழாவி வர
வெண்சாமரம் வீசிவர, துரைமக்கள் ஏறிவர, அது என்ன ?

147643
600 008

20. பழமொழிகள் : இங்குள்ள பழமொழிகளுக்கும், படங்களுக்கும் எவை ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருக்கும் என்று கண்டுபிடி.

1. கந்தை ஆனாலும் கசக்கிக்கட்டு.
2. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
3. உரலுக்கு ஒருபுறம் இடி மத்தளத்திற்கு இருபுறமும் இடி.
4. எட்டாத பழம் புளிக்கும்.
5. எருதின்நோய் காக்கைக்குத் தெரியுமா ?
6. சந்திரனைப் பார்த்து நாய்குலைத்தாவது என்ன ?

JL
T15m21,N36PA
N37.2.1-2

சில குறிப்புகள்.

1, ஒரே அர்த்தம் தரும்படியான வார்த்தைகளைப் படங்களுடன் அமைத்துக்காட்டுதலும் ல, ள, ன, ண, ர, ற, பேதங்களுள்ள வார்த்தைகளை படங்களுடன் அமைத்துக்காட்டுதலும் சிறந்ததே.

2. பெரிய எழுத்தில் இவ்வார்த்தைகளை அட்டைகளில் எழுதி. படங்களுடன் பொருந்தவைத்து அலங்காரமாகச் சுவரில் தொங்கவிடுவதும் உசிதமாகும்.

3, கால அட்டவணையில் ஒழிவுவேளை. சுயேச்சை வேலை என்ற சமயத்தில் இவ்வுபகரணங்களை எடுத்துக்கொண்டு நிழலுள்ள மரத்தடியிற் சென்று விளையாடுவது ஏற்றதாகும்.

ஒழுங்கான ஏற்பாடுகள் அவசியம்.

ஒரேசமயத்தில் 30 பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தைச் செய்யும்பொழுது பல இடையூறுகள் உண்டாகும். ஒரேசமயத்தில் பலர் பல கேள்விகள் கேட்க நேரிடும். பொறுமைக்குச் சோதனைகாலம் வந்துவிடும். இவைகளை நிவர்த்தித்துக்கொள்ள ஒழுங்கான ஏற்பாடுகள் அவசியம். வார்த்தைகள் அடங்கிய பெட்டிகள், பெட்டியிலுள்ள வார்த்தைகள் ஒழுங்கானபடி எழுதப்பட்ட அட்டைகள், ஒவ்வொருவனும் ஒவ்வொருதடவை என்ன காரியங்களைச் செய்துவருகிறுன் என்ன தப்புச் செய்கிறுன் அதை எப்படி நிவர்த்திசெய்யக்கூடும் என்பதைப் பற்றின குறிப்புகள் இவை அவசியம். ஒருவர் ஒரு பெட்டியை முடித்தவுடன் வேறு ஒருவனிடமிருந்து அவன் முடித்துவிட்ட பெட்டியை வாங்கிக் கொள்ளத்தகுந்த ஏற்பாடு இருத்தலும் அவசியம். இதெல்லாம் சுலபந்தான் செய்யக்கூடாத பிரமாதமான காரியம் அல்ல என்று சுலபமாய்ச் சொல்லிவிடலாம். ஆயினும் அனுஷ்டானத்தில் இல்லாத ஞானமும் ஞானம் ஆகாது; படிப்பதொன்று செய்வதொன்று சொல்லுவதொன்று என்பதானது ஸத்தியத்திற்கு விரோதம். ஆகவே எவ்வளவுதூரம் சகோதர சகோதரிகள் இவ்வுபகரணங்களைத் தயார்செய்து வார்த்தைகளைக் கையிலெடுத்துக் கையாளும்படி குழந்தைகளுக்கு உற்சாகமூட்டி விளையாட்டு மூலமாக ஞானத்தைப் புகட்டக்கூடும் என்று பரிசீலனை செய்து பார்க்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

(All rights reserved)

ஆரம்பக் கல்வி

(திருச்சி ஜில்லா ஆசிரியர் கில்டு தயாரித்த யதாஸ்துச் சுருக்கம்)

1. ஆரம்பக் கல்வியின் போக்கு

நமது நாட்டில் பண்டைய காலத்தில் ஆரம்ப பாடசாலைகள் எழுதப் படிக்கவும், கணக்குப் போடவும், நீதி மார்க்கத்தைத் தழுவவும் போதித்து வந்தன. இப் பாடசாலைகள் கிராம சமூகத்தில் கிராமவாசிகளுக்காக ஏற்பட்டன. மத்திய காலத்தில் கோயில்களிலும், மசூதிகளிலும், கிராமச் சாவடிகளிலும், பெரிய நிலச்சுவான்தார் வீடுகளிலும் ஏனைய படிப்பைப் பள்ளிகள் ஊட்டிவந்தன. ஆங்கில ஆட்சியில் கிருஸ்தவ குருமார்கள் பள்ளிகள் ஸ்தாபிக்க ஆரம்பித்தனர். இதுவரையில் படிப்பு லௌகிக வாழ்க்கையை ஒட்டி வந்தது. கிருஸ்தவர்கள் மதப் படிப்பையும் பள்ளிக்கூடங்களில் புகுத்தலாயினர். ஆசிரியர் கிராமத்தில் சிறந்த ஓர் வாசியாக இருந்துவந்தார். பொது மக்கள் ஆதரவைப் பெற்றிருந்த பள்ளிகள் பிரிட்டிஷ் ஆட்சியில் சர்க்கார் அங்கீகாரமும் உதவியும் பெற்று மேன்மையடைய விரும்பின.

2. துரைத்தன நடவடிக்கை

1835-ல் சம்பளம் போக பாக்கி பணச்செலவுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள திட்டம் துரைத்தனத்தார் ஏற்பாடு செய்தனர். ஆனல் இக்கொள்கை சீக்கிரம் கைவிடப்பட்டது. சர்க்கார் உதவி மான்யக் கொள்கையை அனுஷ்டிக்கலாயினர். இக்கொள்கையும் மறுபடி மாற்றப் பட்டது. உதவி மான்யம் குறைக்கப்பட்டது. முதலில் பரீக்ஷை தேரிய கணக்கின் மீது உதவியளிக்கப்பட்டது. அதன் பின்னர் கல்வி இலாகா கண்காணிப்பாளர் பரீக்ஷையின்மீது உதவி மான்யம் சிபார்சு செய்யப் பட்டது. ஆசிரியருக்கு இப்படி ஜீவனும்சம் அளிக்கப்படும் கொள்கையும் தற்போது மாற்றப்பட்டு வருகிறது. இனித் திறமைப் பள்ளிகளுக்கே உதவியளிக்கப்படும் என்ற கொள்கை உலாவிவருகிறது.

3. தேச மனப்பான்மை

கல்வி விஸ்தரிப்பு அவசியம் என அறிஞர் முயல ஆரம்பித்தனர். இலவசக் கட்டாயக்கல்வி வேண்டுமென காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே நினைவுகொண்டார்; சட்டசபைகளில் மசோதா கொண்டு வந்தார். இன்னும் கோகலேயின் நினைவு கனவாகவே இருந்து வருகின்றது.

4. இரட்டையாட்சியில் கல்வி

தேச மனப்பான்மையை அறிந்து நிறைவேற்ற இரட்டையாட்சியில் 1919 முதல் சந்தர்ப்பம் வாய்த்தது. இந்தியர் கல்வி மந்திரிகளாக அமர்ந்தனர். கல்வி விஸ்தரிப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. கட்டாயக் கல்வியும் இலவசக் கல்வியும் பரவ சட்டங்களும் இயற்றப்பட்டன. கல்விச்சிலவு திட்டம் உயர்த்தப்பட்டது. பள்ளிகள் பற்பல ஸ்தாபிக்கப்பட்டன. கண்காணிக்கும் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் அநேகர் ஏற்படுத்தப்பட்டனர். பிள்ளைகள் நபரும் அதிகரித்தது. ஆனால் கட்டாயக்கல்வி பரவவில்லை. இலவசக் கல்வி பரவவில்லை. ஜில்லா கல்விச் சபைகள் கல்வி விஸ்தரிப்பை மேற்கொள்ள யோக்கியதையும், ஊக்கமும் இல்லாத தபாலாபீஸ்களாக இருந்துவருகின்றன. விஸ்தரிப்புக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவருகிறது. தேக்கமும் வியர்த்தமும் நிர்வாகம், கண்காணிப்பு, கல்வி புகட்டுவது எல்லாவற்றிலும் ஏற்பட்டு இருக்கின்றன. மான்யங்கள் குறைக்கப்பட்டுவருகின்றன. ஆசிரியர்கள் ஜனசமூகத் தொண்டர்களென்ற நிலைபோய் சமூக அனாதைகளாகப் பாவிக்கப்படுகின்றனர். அங்கீகாரம், மான்யமளிப்பது, கண்காணிப்பது, பள்ளிகள் இருப்பது, எல்லாவற்றிலும் ஊழல்கள் மலிந்து துர்நாற்றம்வீச ஆரம்பித்துவிட்டது. பள்ளிகளுக்குப்போதிய நிரந்தர ஆதாரவில்லை. எனவே கட்டிடம் இல்லை; கல்வித்தேர் அசைய மறுக்கின்றது. கல்வி நிபுணத்வம் அடைந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இல்லை; கண்காணிப்பவர்களும் இல்லை; ஆசிரியர்களும் இல்லை. பள்ளிகள் பாழடைந்து வருகின்றன.

5. புள்ளி விவரங்கள்

(1) 142,277 சதுரமைல் உள்ள நமது இராஜதானியில் 46,017407 ஜனங்கள் உள்ள இடத்தில் 3,094,203 பிள்ளைகளே 51,562 ஆரம்பப்பள்ளிகளில் உளர்.

(2) அநேக கிராமங்களில் ஆண் பெண் குழந்தைகளுக்குப் படிக்கப் பள்ளிகள் இல்லை.

(3) ஆரம்பப் பள்ளிகள் சர்க்கார், நகர பரிபாலன சபைகள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து, உதவிபெற்ற நபர்கள், உதவியற்ற நபர்கள் போன்ற பலர் நிர்வாகத்தில் அகப்பட்டு மனம்போன போக்கெல்லாம் நடத்தப்படுகின்றன.

(4) ஆண்பிள்ளைகள் பள்ளிகளில் 37 சதவிகிதமும், பெண்பிள்ளைப் பாடசாலைகளில் 30 சதவிகிதமும் ஆசிரியர் சர்க்கார் சர்டிபிகேட் பெறாதவர்.

(5) சர்க்கார் அங்கீகாரம் பெற்று நடந்துவரும் மூன்றில் ஒரு பங்கு பள்ளிகள் யோக்யதையற்றவை என்று நிர்வாக அதிகாரிகள் பகிரங்கமாகச் சொல்லுகின்றனர்.

(6) முதல் வகுப்பில் 100 பிள்ளைகள் சேர்ந்தால் நான்காம் வகுப்பில் 26 நபர்களும் ஐந்தாம் வகுப்பில் 11 நபர்களுமே எட்டிப் பார்க்கிறார்கள். மற்றவர் தேங்கி, மறைகின்றனர்.

6. ஆரம்பக் கல்வி தடைபடும் காரணங்கள்

முதன்முதலாக ஆரம்பக்கல்வி இலக்ஷியம் வரையறுக்கப்படவில்லை. பள்ளிக்கூடங்களுக்கும், கல்வி விஸ்தரிப்பிற்கும் துரைத்தனத்தில் நாட்டிற்கு வேண்டிய அளவு பணமில்லை. பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்த வகையில் சில இடங்களில் பற்பல வேண்டாதபள்ளிகளும் சில இடங்களில் ஒரு பள்ளிக்கூடங்கூட இல்லாமலும் திட்டம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் ஏழ்மையால் பெற்றோர் குழந்தைகளுக்கு சம்பளமும் இதர செலவும் செய்ய முடியவில்லை. பள்ளிகள் நடத்தப்படும் முறைகள் விருப்பத்தைப் போக்கி, வெறுப்பை உண்டுபண்ணுகின்றன. ஆசிரியர்கள் சர்டிபிகேட் பெற்றவர்களே ஒழிய தொழில் திறமையுடையவர்களல்ல. ஆசிரியர்கள் இந்த தேசத்தில் கூலியாட்களைப்போல் நடத்தப்படுவதால் தொழில் அபிவிருத்தி மனப்பான்மை உடையவராகவும் இல்லை. வருஷம் முழுவதும் புதிதுபுதிதாக வகுப்புகளில் பெற்றோர்கள் பிள்ளைகளை கிராமங்களில் பள்ளிகளில் சேர்க்கின்றனர். ஆகையினால் வரையறுக்கப்பட்ட வகுப்புகளில் பல திறமை வாய்ந்த குழந்தைகள் தேக்கமுறுகின்றன. பள்ளிப் படிப்பு பள்ளிக்கு உதவாமல் இருப்பதால், பெற்றோர்களுக்கும் படிப்பில் ஓர் ருசியில்லை. ஜன சமூகத்திலும் படிப்பு தேச விடுதலைக்கு ஓர் சஞ்சீவி என்பது தெளிவாக இல்லை. சர்க்கார் இந்நிலையில் ஞான ஒளி பரவ ஏற்பாடு செய்யவும் சக்தியற்று இருக்கின்றனர்.

7. சர்க்கார் சமீப முயற்சிகள்

இந்நிலையிலிருந்து கல்வித்தேரை அசைக்க, சர்க்கார் பெரும் பாடுபட்டு வருகின்றனர். சாம்பியன் துரையின் திட்டம் சிறிய பள்ளிகளைச் சேர்த்து பெரிய பள்ளிகளாக்கி கல்வியை ஒழுங்குபடுத்த ஏற்பாடுசெய்வது. அத்திட்டம் அநேக பள்ளிகளின் அதிகாரிகளின் எதிர்ப்பால் முறிந்தது. டிசம்பர் 1935-ல் 5000 ஜனத்தொகை உள்ள இடங்களில் ஆண்களுக்கு கட்டாயக் கல்வியளிக்க ஓர் யாதாஸ்து தயாரிக்க ஓர் கமிட்டியை சர்க்கார் நியமனம் செய்தனர். 1936 ஆகஸ்டு மாதம் எதிர்பார்த்த யாதாஸ்து வெளிவந்தது. தேக்கம், வியர்த்தம், என்ற இரு வியாதிகளைப் பரிகரிக்க பல யோசனைகள் சொல்லப்பட்டன. கட்டாயக் கல்வி முடியாது என்று சொல்லப்பட்டது. குழந்தைகள் சேர்க்கப்பட்ட பின் பள்ளிகளினின்றும் வாபீஸ் பெற்றுக்கொள்ளக்கூடாது என்ற ஓர் விதக் கட்டாயம் மட்டில் விதிக்க சிபார்சு செய்யப்பட்டது. 1936 டிசம்பரில் மான்ய விதிகள் மாற்றப்பட்டன. கல்வி இலாகா கண்காணிப்பு நபர்கள் அதிகரிக்கப்பட்டுவிட்டனர். ஆசிரியர்களுக்கு ஜீவனாம்சம் கொஞ்சம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. திறமையற்ற பள்ளிகள் எடுக்கப்படுகின்றன.

8. புதிய திட்டத்தின் குறைகள்

நாடு இலவசக் கட்டாய கல்வி இலக்ஷியத்தை நாட, சர்க்கார் தேக்கத்தை தடுக்க இலக்ஷியமாகக் கொண்டுவருகின்றனர். ஜனங்களும் ஜனத் தலைவர்களும் கட்டாயமுறை வேண்டுமென்று கேழ்க்க சர்க்கார் தாஜாசெய்யும் தத்வத்தைக் கையாளுகின்றனர். மான்ய விதிகளால் பள்ளிக்கூட அதிகாரிகள் பயனடைகின்றனரே ஒழிய, ஆசிரியர்கள் அவர்களுக்கென்று அளிக்கப்படும் மான்ய அளவுகூட சம்பளமாக அளிக்கப்படவில்லை.

மான்ய விதிகள் குறைக்கவும் கூட்டவும் ஏற்பட்டு இருப்பதில் சர்க்கார் கண்காணிப்பவர் அதிகாரம் வலுக்குமே ஒழிய, திறமையுள்ள திறமையற்ற பள்ளிகள் உண்மையிலேயே கண்டுபிடிக்கப்படமாட்டா. புதிய விதிகளின்படி கணக்குகள் தயாரிக்கப்பட்டு மான்யம் வாங்க வசதிகள் இல்லாமல் இல்லை, குழைந்தைகளும், ஆசிரியர்களும், பள்ளிகளும் இருந்த நிலையிலேயே இருக்க சூசிகங்கள் காணப்படுகின்றன.

9. தேன் இந்திய ஆசிரியர் சங்கமும் ஆரம்பக் கல்வியும்

1908 முதல், கல்வியபிவிருத்திக்கும் ஆசிரியருக்கும் பாடுபட்டு வரும், தென்னிந்திய ஆசிரிய சங்கம், இரட்டையாட்சி காலந்தொட்டு ஆரம்பக் கல்வியைப்பற்றிய சில தீர்மானங்கள் செய்திருப்பது அச்சங்கத்தின் மனப்பான்மையைக் காட்டும். 1919-ல் ஆரம்பக்கல்வி நிர்வாகம் பலர் கையில் அகப்பட்டுத் திண்டாடும் நிலையைக் கண்டித்து, கட்டாய, இலவசக்கல்வி எல்லோருக்கும் வேண்டுமென்ற இலக்ஷியங்களை இச்சங்கம் பகிரங்கமாக வெளியிட்டது. 1921-ல், கல்விச்சபைகள் ரத்துசெய்யப்பட வேண்டுமென்றும், மான்யவிதிகள் ஆசிரியர் யோக்யதையைப் பொறுத்து அளிக்கப்படத் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானித்தது. 1923–ல், ஆரம்பக் கல்விச்சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. 1926-ல் ஆரம்பக்கல்வி திட்டமே பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியது. 1930 முதல் ஆரம்பக்கல்வி அவசியத்தை பொதுமக்கள் அறிய சங்கம் கல்வி வாரக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து நடத்திவருகிறது. ஆரம்ப ஆசிரியர் தொழில் அறிவுவரை, அநேக கில்டுகள் அறிவூட்டும் பாடதிட்டங்களை நடத்திவருகின்றன, 1935 முதல் ஆரம்ப ஆசிரியர்களைச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள பெரு முயற்சிகள் செய்துவரப்படுகின்றன. 1936 முதல் ஆரம்ப ஆசிரியர்களுக்காக "பாலர் கல்வி" என்ற மாதாந்திர தமிழ் பத்திரிகைநடத்திவரப்படுகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் படும் தொழில் கஷ்டங்களை நிவர்த்திக்க யாதாஸ்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஜனசமூகத்துக்குச் சங்கத்தின் அபிப்பிராயத்தை அறிவிக்க யாதாஸ்து ஒன்றும் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

10. வருங்கால வேலை.

தேசநிலையையும், மனப்பான்மையும், அவசியத்தையும் மேற்கொண்டு, கல்வியிடையே சர்க்கார் முழுப்பொறுப்பு வகிக்க அவசிய மேற்பட்டு விட்டது. ராஜீய, சமூகவாழ்வுக்கு எழுத்தறிவு இன்றியமையாதது. ஜனநாயகம் வலுக்க கிரல் பேர்வழிகள் நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். இதுகாறும் சர்க்கார் அனுஷ்டித்த கொள்கை வியர்த்தத்தையும் தேக்கத்தையும் கொண்டு வந்து விட்டபடியாலேயே, துரைத்தனம் கல்வியிடத்தில் விஸ்தரிப்புக்கொள்கையும், கட்டாயமுறையும், பணப்பொறுப்பையும் அனுஷ்டிப்பது அவசியமாகின்றது. மற்ற தேசங்களுக்கு மேன்மை இலவசக் கட்டாயக் கல்வியால் வந்திருக்குமானல், இந்தியாவிற்கும் அஃது பொறுத்தமாகும். அதற்கு ஒருதிட்டம் ஒவ்வொரு மாகாணத்திலும் போடவேண்டியது அவசியமாகும். அதை நடத்தக் கல்விவகையில் செலவுதிட்டத்தை இரட்டிக்கவேண்டிய அவசியமாகும். மற்றநாடுகளில் கையாண்டுவரும் நவீனமுறைகளைக் கையாண்டு கல்வி பயன் தருமாறு செய்யவேண்டும். பள்ளிக்கூடங்களை நல்ல தோட்டங்களாக்கல் வேண்டும். குழந்தைகளின் மனோதத்வத்தையும் வளர்ச்சியையும் ஒட்டி கல்விதிட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

பல் வேரிடங்களுக்கு வேண்டிய பல்வகைப் பள்ளிகள் வேண்டும். பள்ளிக்கூடங்கள் ஜனசமூகங்களின் ஆதரவைப்பெறச் செய்தல் வேண்டும். பள்ளிகளுக்காக உழைத்துவரும் ஆசிரியர்களுக்கும் உத்யோகஸ்தர்களுக்கும் பள்ளிகள் நடக்கும் விஷயத்தில் ஸ்வதந்திரம் வேண்டும். கல்வி இலாகா ஆங்காங்கு ஸ்தலங்களுக்கு ஏற்றவாறு பள்ளி திட்டங்கள் அமைக்க வேண்டும்; வசதிகளும் அமைத்துத் தரவேண்டும்.

11. ஓர் சீர்திருத்த திட்டம்

ஆரம்பக் கல்வியைத்திருத்தி அமைக்கக் கீழ்க்கண்ட ஏற்பாடுகள் அவசியமாகும்:—

(1) கல்வி விஸ்தரிப்பு திட்டம் தேசத்தேவைகளை ஒட்டி, இந்தியக் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படுதல் ;

(2) அத்திட்டத்தை நிறைவேற்ற அதில் ஈடுபட்ட கண்காணிப்பாளர் ஏற்படுத்தப்படுதல் ;

(3) பள்ளிக்கூடங்கள் இல்லாதவிடங்களில் கட்டாயமுறையை அமுலுக்குக் கொண்டு வருதல் ;

(4) சிசுக்களுக்காகப் பள்ளிகளும், வயதுவந்த குழந்தைகளுக்காகவும் பள்ளிகள் அமைக்கப்படுதல் ;

(5) ஆசிரியர்களை நிபுணர்களாகக் புதியமாதிரி போதனமுறைக் கல்லூரிகள் நிறுவப்படுதல் ;

(6) ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு யோக்கியதை வாரியாக, சட்டபூர்வமாக அந்தஸ்து அளிப்பது;

(7) பள்ளிக்கூடங்களில் இன்றியமையாத எழுத்தறிவு, கணக்கறிவு, படிப்பறிவுடன் நாட்டின் பரம்பரைத் தொடக்கத்துடன் கல்வி முறையை இணைத்தல்;

(8) பள்ளிக்கூடங்களை ஜனசமாஜ விடுதிகளாக்குதல்;

(9) நகர கிராம பள்ளிகளில் அவைகளுக்கு ஏற்ற வசதிகள், விதிகள் ஏற்படுத்தல்;

(10) நவீன ஆராய்ச்சி அறிவை ஒட்டி வகுப்புகளில் போதிப்பது;

(11) குழந்தைகளுக்கு மத்தியான சாப்பாடு அளித்தல்;

(12) ஆசிரியர்கள் தொழில் வளர்ச்சியடைந்து வர ஓர் வரையருக்கப்பட்ட திட்டம்.

(13) கிராமந்தோறும் ஓர் பள்ளி அமைத்தல்;

(14) கல்வி நிதிப் பாதுகாப்புச்சட்டம் ஒன்று இயற்றுதல்;

(15) கல்வி சர்க்கார் மேற்பார்வையில், நகரங்களில் நகர பரிபாலன சபையினிடமும், கிராமங்களில் கல்விப் பஞ்சாயத்து சபையினிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

(16) ஆரம்பக்கல்விச் சட்டம் திருத்தி அமைக்கப்படுதல்.

‘ஆசிரியர்களும் விடுமுறை நாட்களும்’

கீழ்நகர். சி. சந்திரசேகரன் M. A., L. T.,

இந்திய ஜனங்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் இந்தியாவில் பல இடங்களிற் சிதறிக் கிடக்கும், கிராமங்களும், கிராமத்தாரும் முன்னேற்றமடைவது அவசியம். நம் தேசத்தில் சுமார் 100-க்கு 90பேர் (280 கோடி ஜனங்கள்) கிராமங்களிலேயே வசிக்கின்றனர். கிராம வாழ்க்கை புனிதமாயும், உபயோகமுள்ளதாயும் தேச முன்னேற்றத்திற்கு ஏற்றதாயும் இருக்கும்படி செய்ய மூவரே ஏற்றவர். அவர்கள் உபாத்தியாயர், வைத்தியர், மதகுரு என்னும் மூவராவர். இம்மூவரில் ஆசிரியரே முதல் ஸ்தானம் வகிப்பவரென்றும் நாம் சொல்லாமலேயே விளங்கும். ஆகவே ஆசிரியர் அறிவாளியாகவும், பரந்த நோக்கமும் எல்லோரிடத்தும் அன்பும் கருணையுங் கொண்டு தன் வாழ்க்கையை பிரயோஜனமுள்ளதாய்ச் செய்யவேண்டும். ஆசிரியர் தன் வாழ்நாளை கற்பதிலும், கற்றதைப் பிறருக்கு அறிவுறுத்துவதிலும் செலவழிக்கவேண்டும்.

பொதுஜனங்கள் பள்ளி ஆசிரியரை ஒழிவுநேரம் மிகுந்தவரென்று எண்ணுகிறார்கள். இது ஒருவிதத்தில் உண்மையே. சனி, ஞாயிறுகள் போக மைகல்மஸ் (Michelmus) நவராத்திரி, (Christmas) கிரிஸ்துமஸ் நாட்களும் விடுமுறையாகின்றன. இதனுடன் நீண்ட விடுமுறை நாட்களும் (சுமார் 2 மாதம்) கோடைகாலத்திலுண்டு. சராசரி வருஷத்தில் 200 நாட்களே பள்ளி உபாத்தியாயர் உழைக்கிறார்கள். விடுமுறை நாட்கள் அதிகமாக இருந்தபோதிலும், உழைக்கும் நாள்களுக்குத் தகுந்தவாறே அவை அமைந்திருக்கின்றன. பள்ளிப் பிள்ளைகளுடன் வருஷமுழுவதும் உழைப்பதற்கு வேண்டிய சக்தியை, பொறுமையை, இவ்விடுமுறை நாட்களில் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே ஆசிரியர் தன் விடுமுறைகளை நாட்களை விரயம் செய்யாமல் தமக்கும் பிறருக்கும் உபயோகமுள்ளதாகும்படி செய்யவேணடும்.

விடுமுறை நாட்களைப் பிரயோஜனமுள்ள வழிகளால் செலவழிக்கத்தக்க சில முறைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) பெரிய நகரங்களிலே வேலையாயிருந்து பெரும்பான்மையாக பட்டிணங்களிலிருக்கும் ஆசிரியர்கள் கோடை விடுமுறையில் குறைந்தது ஒரு மாத காலமாவது கிராம வாழ்க்கையை அநுசரிக்கலாம். கிராம வாழ்க்கையின் உன்னதத்தை அறிவதோடு தேகத்திற்கு ஆரோக்கியமாகும். மன அமைதியும் ஏற்படும். இந்திய நாட்டின் உண்மை மக்களான கிராமத்தாரின் வறுமையையும் அவர்களின் தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய உபகரணங்களையும் அறிந்து தன் அறிவிற்கு எட்டியவாறு

அவர்களுக்கு உதவி புரியலாம். தவிர ஆசிரியரின் செலவும் கிராமவாழ்க்கையினுல் ஒரு சிறிது குறையும்.

(2) பள்ளி உபாத்தியாயர் தன் அநுபவத்தினுல் தான் கற்பிக்கும் பாடத்திற்கு ஏற்ற சிறந்த புத்தக மெதுவென்பதை அறிந்துகொள்ளுகிறுர். ஆனுல் ஒவ்வொருவரும் தன் சொந்த அநுபவத்திலிருந்தே புத்தகத்தை பொறுக்கி எடுப்பதினுல் வீண் காலதாமதமும், சிரமமும் ஏற்படுகின்றன- ஒவ்வொரு உபாத்தியாயரும் தன் ஒய்வு நேரங்களில் தன் பாடத்தில் அதுவரை வெளிவந்துள்ள புத்தகங்களின் ஜாபிதா எழுதி அதில் ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் சிறு குறிப்புகள் எழுதிவைத்து வெளியிட்டால் எல்லோருக்கும் உபயோகப்படும்.

இம்மாதிரி செய்வது பிறதேசங்களில் சர்வ சாதாரணமாக இருக்கிறது. பாடபுத்தகங்கள் தவிர கதைகள் நாவல்கள் முதலியவைகளைப் பற்றியும் இவ்வாறு ஜாபிதா தயார்செய்து அவை எவ்வயதுள்ள சிறுவர்களுக்கு உபயோகமானவை என்றும் எழுதிவைக்கலாம். இச்சாபிதா விவரங்களை 'பாலர் கல்வி' போன்ற பத்திரிகைகளின் மூலமாய் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தலாம். சென்னை புத்தகசாலைய சங்கத்தார் (Madras Library Association) இவ்விஷயத்தில் அதிக சிரத்தை வைத்து சிறந்த அறிவாளிகளைக் கொண்டு புத்தக ஜாபிதாக்கள் தயார் செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

(3) மேற்கூறியவாறு செய்வது பொது ஜனங்களுக்கு நம்மால் செய்யக் கூடிய சிறந்த ஊழியமாகும். உயர்தர கலாசாலை High Scchool ஆரம்ப பாடசாலைகள் இம்மூன்றிற்கும் தனித்தனியே, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், கணிதம், கைத்தொழில்களும், சுகாதாரம் முதலியவைகளைப் பற்றியுள்ள சிறந்த புத்தகங்களின் ஜாபிதா மிகவும் உபயோகமாகும்.

தவிர ஒவ்வொரு உபாத்தியாயரும் தத்தம் சக்திக் கேற்ப தன் சொந்த புத்தகசாலை வைத்துக்கொண்டிருக்க வேண்டும். தன்னுல் கூடுமானவரை மாதா மாதம் தன் வருமானத்தில் ஓர் பங்கை புத்தகசாலைக்கென்று எடுத்து வைத்து அறிவு புகட்டும் புத்தகங்களை வாங்குதல் வேண்டும்.

(4) விடுமுறை நாட்களை உபயோகமாகச் செய்வதற்கு வேறொரு வழி பிறபாஷையில் உள்ள சிறந்த புத்தகங்களைத் தம் தாய் பாஷையில் மொழிபெயர்ப்பதாகும். இது சிரமமான காரியமே என்றுலும் சிரமத்திற்குத் தகுந்த ஊதியமாகும். ஏனெனில், சிறந்த அரிய கருத்துக்கள் நிறைந்த அன்னிய பாஷை புத்தகங்களை மொழிபெயர்த்தலில் நம் தாய் பாஷையும் அபிவிருத்தி அடைகின்றது. வெளி நாடுகளில் இதற்கென பல பாஷைகளில் பயிற்சி பெற்ற பலரைக் கொண்டு சிறந்த உயரிய எண்ணங்கள் நிறைந்த புத்தகங்கள் எல்லோருக்கும் பயன் படுமாறு பல பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன.

நம் தேசத்தில் இம்முறையை கையாளுபவர் வெகு சிலரே. பொது ஜனங்களிடமிருந்து இதற்கு வேண்டிய ஆதரவு இதுவரை கிடைத்ததில்லை. ஆனுல் சமீப காலத்தில் சென்னை புத்தகசாலை சங்கத்தினுலும் மற்றும் சிலராலும் இக்காரியம் செய்யப் பெற்றுவருகின்றது. அவர்களுக்கு வேண்டிய உதவி புரிவதும் மற்றொரு வழியாகும். பிரதிதினமும் சில நிமிஷங்கள் நாம் ஒவ்வொருவரும் நாம் பயிற்சி பெற்றிருக்கும் பாஷையிலும் பாடத்திலும் செலவழித்தோமானுல் வருஷ முடிவில் ஓர் புத்தகம் வெளியிட முடியுமென்பது திண்ணம்.

(5) இந்திய உபாத்தியாயர்கள் மீது ஓர் பெருங்குறை கூறப்பட்டு வருகின்றது. சர்வ கலாசாலை பரீக்ஷைகளில் தேறி, பட்டதாரிகளாகும்போது அவர்களுக்குள்ள ஆர்வமும், ஞானமும் சில வருஷங்கள் பள்ளித்தொழிலில் ஈடுபட்டதும் மறைந்து தங்கள் அபிவிருத்திக்கு வேண்டிய வழிகளைத் தேடாமல் இருக்கின்றனர் என்பதே யாகும். அநேக புது புத்தகங்களும்,பத்திரிகைகளிலும் நமக்கு அதி அவசியமான விஷயங்களைப்பற்றி வெளியிடப்படுகின்றன. இவைகளை நாம் படித்து நம் தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய வழிகளைக் கற்கலாம்.ஒழிந்த நேரங்களில் பொது வாசகசாலைக்கோ, புத்தகாலயங்களுக்கோ சென்று பிறநாட்டில் கல்வி அபிவிருத்திக்காக செய்பவைகளை படித்தறியலாம்.

(6) விடுமுறை நாட்களில் பிரயாணம் செய்வது நாம் செய்யக் கூடிய மற்றோர் உபயோகமான காரியமாகும். ஆதிகாலம் தொட்டு நம் நாட்டில் ஜனங்கள் பிரயாணம் செய்வது வழக்கமாக இருந்துவருகின்றது. புண்ணிய க்ஷேத்திரங்கள் சென்று எம்பெருமானை தரிசனம் செய்வதற்காகவோ, தேக ஆரோக்கியத்திற்காகவோ செய்வதுண்டு. இதனுடன் பல விடங்கள் சென்று வருவதினுல் ஒருவரின் அறிவும் நோக்கமும் விரிவடைகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. நம் தாய்நாட்டில் சரித்திர சம்பந்தமான இடங்களிலும், புண்ணிய க்ஷேத்திரங்களும், தேக, ஆரோக்கியத்திற்கேற்ற வாசஸ்தலங்களும் பலவுள்ளன. தற்காலம் ரயில்வே கம்பெனியாரும், உபாத்தியாயர்களுக்கு என்று கட்டணத்தை குறைத்திருக்கிறுர்கள். இவ்வளவு வசதிகளிருக்கும்போது நாம் நம் சக்திக்கேற்றவாறு ஏன் பல விடங்களை நம் விடுமுறை நாட்களில் காணக்கூடாது?

தேக ஆரோக்கியத்தின் அவசியத்தைப்பற்றி சொல்லத்தேவையில்லை. வருஷ முழுவதும் உழைத்ததற்கு ஏற்ற ஒய்வை மனோரம்மியமான, ஆரோக்கியமான, வாசஸ்தலங்களில் சென்றிருந்து மற்றும் ஓர் ஆண்டு நம்மிடம் ஒப்படைக்கப்படும் குழந்தைகளுக்காக உழைப்பதற்குவேண்டிய ஆன்ம சக்தியையும், திட சரீரத்தையும் பெற்று வரலாம்.

இவை தவிர வேறு பல முறைகள் மற்றோருக்குத் தெரிந்திருக்கலாம். என் சிற்றறிவிற்கு எட்டியதை எழுதினேன்.

குழந்தைகளின் கைவேலை

4. படத்திற்கு சட்டம் போடுதல் (புதுமாதிரி)

நாம் படங்களை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ள சட்டமாவது போடலாம் அல்லது புதியமாதிரியாக பாஸிபார்டு காகிதம் கொண்டு ஒட்டி நேர்த்திசெய்து காப்பாற்றலாம். படத்திற்குச் சட்டம் போடுவதற்கும் பல ஆயுதங்கள் தேவை. உங்களிடம் அந்த ஆயுதங்கள் இருக்காது. பாஸிபார்டு காகிதம் கொண்டு படம் ஒட்ட ஆயுதம் ஒன்றும் வேண்டாம். அது வெகு சுலபம். நீங்களே அதைச் செய்துகொள்ளலாம்.

பாஸி பார்சி என்பது ஒருவகை காகிதச்சுருள். இது கடையில் கிடைக்கும். இது கிடைக்காவிட்டாலும் அதற்குப் பதிலாக விலைமலிந்த மார்பிள் காகிதம், காலிகோ காகிதம் அல்லது சாதாரண வர்ணக் காகிதத்தையும் உபயோகிக்க முடியும்.

படத்தை ஒட்டும் சட்டம் அல்லது அட்டை

முதலில் படத்தை ஒரு அட்டையில் ஒட்டிக்கொள்ள வேண்டும். அட்டை படத்தைவிட பெரிதாக விருக்கவேண்டும். படம் 1-ல் காட்டியதுபோல் படத்தை அட்டையின் நடுவில் ஒட்டு. படம் ஒட்டப்படும் அட்டை சற்று மங்கினநிறமுள்ளதாய் இருப்பது நல்லது. லேசான நீலம், லேசானபச்சை, லேசான சாம்பல் வர்ணம் ஏற்றது.

படம் 1-ல் a, b, c, d தான் ஒட்டப்படும் அட்டை. e, f, g, h என்பதுதான் ஒட்டியிருக்கும் படம். படம், அட்டை இரண்டின் மூலைக்கோடும் ஒன்றன்மேல் ஒன்று பதியும்படி பார்த்து ஒட்ட படமானது சட்டத்தின் நடு மத்தியில் ஒட்டப்படும். படம் 2, படம் 3-ல் காட்டியபிரகாரம் படங்களை அட்டைகளின் ஒரு மூலையின் அருகாமையில் ஒட்டலாம். இங்கு படத்தின் e h மூலைக்கோடும், அட்டையின் a d மூலைக்கோடு மாத்திரமே ஒன்றோடு ஒன்று பதிகின்றன. bc, fg மூலைக்கோடுகள் ஒன்றோடு ஒன்று பதிகிறதில்லை. படம் 2 நேரேயுள்ள படம், படம் 8 படுக்கையாயுள்ள படம்.

பாஸிபார்டு கொண்டு ஓரம் ஒட்டுதல்

படம் 4-ஐப்பார். சட்டத்திற்குச் சரியான மற்றொரு அட்டை எடுத்துக்கொள். அட்டையின் நடுபாகத்திற்கு மீது படத்தில் காட்டிய



படி 2 துவாரம் செய்துகொள். இத்துவாரம் வழியாக ஒரு கயிறு கொடுத்து அதை படத்தில்காட்டியதுபோல் முடிபோடு, கயிறு கட்டுவதற்குப்பதிலாக படம் 7-ல் காட்டியதுபோல் இரண்டு வளையங்கள் பதிய வைத்துக்கொள்ளலாம். படம் 6-ல் காட்டியதுபோல் SS மாதிரி 2 துவாரங்கள்செய்துக்கொள். 7Aல் காட்டியபடி வளையத்திற்குள் ஒரு துண்டு துணி அல்லது காகிதம் கொடுத்து ஒட்டிக்கொள். 7B மாதிரியும், 8 A, 8B மாதிரிகளையும் கவனிக்க.

கண்ணுடிபோடும் விதம்

வர்ண அட்டையின்மீது ஒட்டிய படத்தை துவாரம் செய்த அட்டையின்மீது வை, படத்தின் அளவிற்குச் சரியான கண்ணுடியை படத்தின்மீது வை, படத்தின் நீளத்திற்குத் தகுந்தவாறு பாலிபார்டு துண்டுகள் 2 வெட்டிக்கொள். படத்தின் அகலத்திற்குச் சரியான 2 துண்டும் வெட்டிக்கொள்; படம், அட்டை, கண்ணுடி மூன்றையும் சேர்த்துப் பிடித்து பாலிபார்டு காகிதத்தினால் ஒட்டவேண்டும். பாலிபார்டு காகிதத்தை (படம் 9 பார்க்க) அகலத்தில் இரண்டாகமடித்து ஒருபாகம் கண்ணுடியின்மீது ஓரமாகவும், மற்றொன்று அடி அட்டையின்மீது ஓரமாகவும்படும்படி ஒட்டிவிடு, பாலிபார்டு காகிதங்களை படம் 10 b-ல் காட்டியபடி கத்தரித்துக்கொள். படம் 11 ல் aaல் காட்டியபடி மூலைகள் கத்தரிக்கப்பட வேண்டும்.

அதேமாதிரி அகலபாகத்திலும் பாலிபார்டு காகிதம் ஒட்டிக்கொள்; படம் 12 ல் காட்டியபடி இப்பொழுது படத்தை தொங்கவிட முடியும்.

(All rights reserved) K. N. Chary.

இரக்ஷணைப் படம்—12



ரஸ்தாக்களிலும் வீதிகளிலும் பட்டம் அல்லது காத்தாடி விடுவது ஓர் அபாயமான பழக்கம். படத்தில் ஓடும் சிறுவர்கள், ரஸ்தாக்களில் செல்லும் வண்டிகளைக் கவனிக்காமல் ஓடுவதால் தங்களுக்கு அபாயம் நேரிடுவதுமல்லாமல், பிறருக்கும் அபாயம் உண்டாகும்படி செய்கிறார்கள். பட்டம் விட ஒரு மைதானத்திற்குச் செல்ல வேண்டும்.

147643
சென்னை-600 008

ஆச்சர்ய குறிப்புகள்



வட ஆஸ்திரேலியாவுக்கருகில் வசிக்கும் ஒருவித மீன். நீர் ஓரத்தில் பூண்டுகளிலிருக்கும் பூச்சிகளின்மேல், இந்த மீன் தன் வாயிலிருந்து தண்ணீரை இறைக்கும். பூச்சி கீழே விழுந்தவுடன், வேகமாய்ச் சென்று அதை விழுங்கி விடும்.

ப்ரஸீல் நாட்டிலிருக்கும் ஒருவித வண்டு. இதற்கு (Giant Titan) என்று பெயர். இவ் வண்டுகளில் சில ஒன்பது அங்குல நீளமிருக்கும்.

கினியா நாட்டிலிருக்கும் ஆண் ஓணானின் தலையில் கொம்புகள் இரண்டு உண்டு. இவ்வினத்தைச் சேர்ந்த ஓணான் குட்டி போடும்.

JL
T15m24, N36PF
.2.1-2

பத்திராதிபர் குறிப்புகள்.

ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வி சம்பந்தமாய் திருச்சி ஜில்லாபோர்டார் தயாரித்த யாதாஸ்து நோக்கத்தகுந்தது. நிகழும் மாகாண கல்வி மகாநாட்டில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடையவேண்டும் சீர்திருத்தங்களைப் பற்றி தீர்மானம் ஒன்று பிரேரேபிக்கப்படும்.

கல்வி சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தாம், தாம் காணும் குறைகளை எடுத்துக் கூறல் அவசியமே; எனினும் குறை கூறுவதுடன் நிற்காமல், உண்மையில் முன்னேற்றத்திற்கு வேண்டும் முயற்சிகள் செய்தால் நன்றாக இருக்கும்.

கட்டாய ஆரம்பக் கல்வி அவசியம் என்பதை ஒப்புக்கொள்ளாதவர்கள் இல்லை; அரசாங்கத்தாருக்கும் அது ஒப்ப முடிந்ததே. என்றாலும் பொருள் முட்டுப்பாட்டாலும், வேறு சில காரணங்களாலும், பள்ளிக்கூடங்களின் யோக்யதாம்சத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படையாகக் கொண்டு 'தேக்கத்தை (Stagnation)ப் போக்கவேண்டும், அரைகுறையாய் படித்து நிற்பதால் விளையும் சேதத்தைக் குறைக்கவேண்டும்' என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பதிற் பயனில்லை. அன்றி தேவையான அளவு திறமை பெறாத பள்ளிக்கூடங்களை அடியோடு எடுத்து விடவேண்டும் எனத் தீர்மானிப்பதும் சரியன்று. அவயவங்களில் கெடுதல் நேரிட்டால் வெட்டி எறிவது ஒன்றே வழியா? வேறு சிகிச்சைகள் இலவோ? அவற்றை ஆராய்வதே அறிவுடைமையாகும். மற்ற இலகா சம்பந்தப்பட்டவரையில் பொருள் நெருக்கடி அதிகமாகத் தோன்றாதிருக்க, கல்வி இலாகாவைப் பற்றி பேசும்பொழுது மாத்திரம் இதனை பெருக்கிக்காட்டுவது எங்களுக்கு வியப்பையும் வருத்தத்தையும் தருகிறது. உதாரணமாகக் கிராம வாசிகள் ஏழைகள்; இரண்டு வேளை வயிறு நிரம்ப உண்ணவும் போதிய பொருளில்லாதவர்கள். ஆதலால் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் ஒருவேளை பகல் போஜனம் அளிக்க ஏற்பாடு செய்தால் அவர்களை பள்ளிக்கூடங்களில் தேவையான ஆண்டுகள் படிக்கச் செய்யலாம்' என்ற உண்மை அரசாங்கத்தார் உட்பட எல்லோரும் உணர்ந்ததே. இவ்விஷயம் சில மாதங்களுக்கு முன்பு ஒரு கமிட்டியார் ஆராய்ந்து ஒரு குழந்தைக்கு ஒருவேளை

உணவு ஏழு தம்பிடி வீதம் கணக்கிட்டு சுமார் பதினொன்றுலக்ஷம் ரூபாய் வருஷவாரியில் செலவிட வேண்டுமென கண்டறிந்துளர், இது அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ள முடியாத காரியம் என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

பொருள் முட்டுபாடான சமயத்தில் 11 லக்ஷம் அதற்கு தீர்வை பணத்திலிருந்து தேடுவது கஷ்டமென்பதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம்; என்றாலும், அரசாங்கத்தார் மனம் வைத்தால் இதற்குத் தேவையான பணம் சம்பாதிக்க முடியாதா? அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற எத்தனையோ காரியங்களுக்கு நம் நாட்டார் லக்ஷக்கணக்கான ரூபாய் கொடுத்துதவி, தம் ஈதல் இயல்பை வெளிக்காட்டி இருக்கின்றார்கள் அல்லவா? ஏழை குழந்தைகளுக்கு ஒரு வேளை அன்னமிட்டு, கண்திறக்க விடுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் வேறுண்டோ? ஒரு பகுதிச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, "எம்மாலியன்றது இதுவே. முழுதும் நடக்க பொதுஜன ஆதரவு தேவை" என வெளிவந்தால் நினைத்த காரியம் முடியாமற் போகாது என்று கருதுகிறோம். ஆகவேண்டும் என மனம் வைத்தால் ஆகாததொன்றில்லை.

நிற்க, அரசாங்கத்தாரும் பள்ளிக்கூட மானேஜர்களும் ஒருவரையொருவர் குறைகூறி, அபிப்பிராய முரண்பட்டு இருந்துவந்தால் ஆரம்பக் கல்வி என்னும் தேருக்கு இருபுறமும் வடம் போட்டு இழுப்பது போலாகும். தேர் நகரவில்லையே என்று கதறினால் அது எப்படி நகரும். ஆதலால் முன்னேற்றமடைய ஒருவர் நோக்கத்தை ஒருவர் உணர்ந்து ஒருபுறம் வடம் போட்டு இழுக்கவேண்டும். இதுவே முன்னேற்றத்தின் சாதனம்.

இனி, ஆரம்ப ஆசிரியர்களுக்குள்ள குறைகள் கணக்கிலடங்கா. பலவிடங்களில் சம்பளம், கிராண்ட் பணத்திற்குக் குறைவு. பொதுவாக சம்பளமே குறைவு. ஜில்லா போர்ட், முனிசிபாலிடி உத்தியோகத்திலிருக்கும் உபாத்தியாயர்களுக்கு சம்பளங்கள் சரிவர கொடுக்கப்படுவதில்லை என்றும், குறைந்த சம்பளங்கள் மேலும் குறைக்கப்பட்டு வருகின்றனவென்றும், சில இடங்களில் மாதக்கணக்காக சம்பளங்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றனவென்றும், அனாவசியமாய் உபாத்தியாயர்களை ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றுகிறார்கள் என்றும், அடிக்கடி நமக்கு நிருபங்கள் வருகின்றன. இவை உண்மையாயின் துக்கிக்கத் தகுந்தவை. கல்வி இலாகா அதிகாரிகளும் ஆசிரியர்களை அவமதிப்பதாக

கேள்விப்படுகிறோம். எந்த அளவுக்கு இது உண்மை என்று கண்டறிவது இன்றியமையாதது. மாகாண முழுதும் இதை விசாரிக்க முடியாதென்றாலும், ஏதேனும் ஒரு ஜில்லாவை தேர்ந்தெடுத்து, ஜில்லா போர்ட் அங்கத்தினர்களையும், மானேஜர்களையும், பொது ஜனங்களில் சில பெரியாரையும், உபாத்தியாயர்களையும் விசாரித்து, அவர்கள் கொடுக்கும் சாக்ஷியங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்கண்ட குறைகளின் உண்மையை ஆராய்ந்து சீர்திருத்த வழிகளைக் காட்டுவது, கல்வி இலாகாவின் பொறுப்பு. இவ்வித விசாரணை செய்ய கல்வி இலாகா அதிகாரிகள் ஒரு கமிட்டியை அவசியம் ஏற்படுத்தவேண்டும்; அதுவும் தாமதமில்லாமல் செய்யவேண்டும் என வற்புறுத்துகிறோம்.

மங்களச் செய்திகள்

‘பாலர் கல்வி’யின் இரண்டாம் ஆண்டு ஆரம்பத்தில், சில பெரியார் நமக்கு நற்செய்திகளை அனுப்பி இருக்கிறார்கள். அன்னோரின் ஆதரவு மிகவும் பாராட்டத் தக்கது. போதனைமுறை சீர்திருத்த மடையவும், ஆரம்பக் கல்வி அபிவிருத்தி யடையவும், இந்தப் பத்திரிகை உழைத்து வருகின்றதென்பதை படிப்பாளிகள் அறிந்துள்ளதே.

முன்னினும் அதிகமாக உபயோகப்படவேண்டும் என்ற நோக்கங்கொண்டு உழைக்க, சந்தாதாரர்கள் ஒருவருக்கு பதின்மராகப்பெருகி, எமக்கு வேண்டும் ஆர்வமூட்டுவார்களென நம்புகின்றோம்.

147643
JL

Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.

English Conversation Book I	for Class IV
do. do. Book II	do. V
Arithmetic for Beginners	in Tamil
Domestic Hygiene	in Tamil
Stories from Indian History	for Class V
Tamil Primer for Beginners ...	... ...

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER *(Retired Teacher)*

2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.

A GUIDE TO

ELEMENTARY SCHOOL TEACHERS

By **Mrs. R. S. SWARNAMBAL,** M.A., L.T.

with a foreword by **D. S. REDDI,** M.A, *(Oxon.)*

English Edn.] **178-pp. with 45 Illustrations** **[Price Re. 1**

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

G. SRINIVASACHARI & SONS,

EDUCATIONAL PUBLISHERS,

Narasingapuram Street —— Mount Road, Madras.

N.B.—**Tamil Edition—in the Press**

Regd. No. M. 3473

தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் — ஐக்கியமும் பெருகும்

ஒன்பது வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.
உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

JUL 1937

ஈஸ்வர ஹு வைகாசி மீ
JUNE 1937

பிரசுர கர்த்தர்கள்:

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆரம்பப் பள்ளிக்கூட பாஷைப்பாடம் ... . —என். ஜெகன்னாதன்	29
2.	புதிய உயர் தரக்கல்வி முறையில் தமிழுக்குரிய இடம் —என். முகம்மது, தமிழாசிரியர், உமேல் பேட்டை	44
3.	பாலர் பாடபுத்தகங்கள் சம்மந்தமான ஓர் ஆராய்ச்சி —பி. சுப்ரமண்ய அய்யர், தியாகராய நகர்	50
4.	பத்திராதிபர் கடிதப்பெட்டி	54
5.	குழந்தைகளின் கைவேலை .... —K. N. சாரி	55
6.	பத்திராதிபர் குறிப்புகள்	57

கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷாவல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

பாலர் கல்வி

JUL 193

தொகுதி 2	1937 ௵ ஜூன் ௴ ஈஸ்வர ௵ வைகாசி ௴	பகுதி 2

ஆரம்பப் பள்ளிக்கூட பாஷைப் பாடம்

போதனைக் குறிப்புகள்

ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

ஆவணக்காப்பகம் சென்னை-600 008

பாஷாபிவிருத்தி முறைகள்

தினசரிக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் குழந்தைகளின் குணாதிசயங்களையும் கவனித்துப் பாடம் சொல்லும்பொழுது பற்பல எண்ணங்கள் மனதில் எழுகின்றன. நாம் தயார் செய்துகொண்டு செல்லும் பாட திட்டம் சில சந்தர்ப்பங்களில் வகுப்பில் ஏற்படும் சம்பவங்களினால் மாறிவிடக் காரணமிருக்கிறது. பிள்ளைகளுடைய விடை, மனோபாவம், புத்திசாலித்தனமாக ஒரு திருப்புகை இவைகளே காரணமாகும். நமது பாஷையை அபிவிருத்தி செய்ய பற்பல விதங்கள் இருக்கின்றன. நூதன முறைக்கு ஏற்ற வழிகளும் நிச்சயமாய்க் காணப்படுகின்றன.

1. A. தொடர் வார்த்தைகள்

உதாரணமாக திரு என்ற பதத்துடன் இயல்பாகச் சேர்க்கக்கூடிய பல பதங்களைச் சேர்க்க சில தொடர்ப் பதங்கள் வருகின்றன.

உதாரணம்

திருநாள்	திருமுகம்	திருவடி	திருக்கூட்டம்
திருவிழா	திருப்பணி	திருமேனி	திருவடியார்
திருக்குளம்	திருவமுது	திருக்கரம்	திருவடிசேவை
திருக்கோயில்	திருப்பதி	திருப்பாதம்	திருப்பதிகம்
திருக்கலியாணம்	திருமண்	திருத்துழாய்	திருப்புகழ்
திருவிளக்கு	திருநீறு	திருப்பாவை	திருமணம்

147643
சென்னை-600 008

இவைகளை அடியிற்கண்ட பிரகாரம் ஒரு மரம்போல் எழுதிக்கொள்ளலாம். "திரு" என்ற சொல்லை முதன்மையாகக் கொண்ட பல சொற்களானது வேரிலிருந்து கிளம்பி கொம்பு கிளை விட்டு உயர வளரும் மரம்போல் செழித்து நிற்பதைப் பார்ப்பது மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.



B. அதேமாதிரி ஒரு வார்த்தையின் பிற்பகுதியில் காணப்படும் சாலை என்னும் பதத்தில் முடிவுபெறுமான பல மொழிகள் தோன்றுகின்றன.

உதாரணம்

பாடசாலை	தங்கசாலை	நாடகசாலை	யாகசாலை
வாகசாலை	பொக்கிஷசாலை	தொழிற்சாலை	பர்ணசாலை
கலாசாலை	ஆயுதசாலை	தர்மசாலை	பாகசாலை
புஸ்தகசாலை	நாணயசாலை	நெசவுசாலை	போஜனசாலை
கல்விச்சாலை	சிறைச்சாலை	வைத்தியசாலை	

இவைகளை அடியிற்கண்ட மரம் போல் எழுதிக் காட்ட முடியும்.



C. இம்மாதிரி வார்த்தைகளைத் தாமே சிந்தித்து ஒழுங்குபடுத்துதலும் அவசியம். உதாரணமாக "காலம்" என்ற சொல்லில் முடியும்படியான பல சொற்களைச் சிந்தித்து எழுதி வந்தபொழுது அவைகளை ஆறு பாகங்களாகப் பகுத்து எழுதலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. மேலும் ஒரு பகுதியில் பதமும் எதிர்ப்பதமும் என்ற இரண்டு வரிசையாகவும், மற்றொரு பகுதியில் மூன்று வரிசையாகவும் எழுதக் கூடுமெனத் தெரிய வந்தது.

1. தினசரி சம்பவங்கள்

   விடியற்காலம், பகற்காலம், சாயங்காலம், இராக்காலம்........

2. வருஷாந்திர சம்பவங்கள்

   வெயிற்காலம், குளிர்காலம், பனிகாலம், மழைகாலம்..................

3. ஒரு தாவரத்தின் வளர்ச்சி

   துளிர்காலம், பூக்கும் காலம், காய்க்கும் காலம், பழுக்கும் காலம்

4. ஒரு குழந்தையின் வளர்ச்சி

ஜனனகாலம், முகம் பார்க்கும் காலம், தவழும்காலம், பல் முளைக்கும் காலம், நடக்கும் காலம்...

5. ஒரு ஜீவிய காலத்தில் ஏற்படும் சம்பவங்கள்.

இவற்றை அடியிற் காட்டியபடி எதிர் எதிரே எழுதிவரலாம்.

ஜனன காலம்	மரண காலம்
நல்ல காலம்	பொல்லாக்காலம்
பொங்கும் காலம்	மங்கும் காலம்
அதிர்ஷ்ட காலம்	துரதிர்ஷ்ட காலம்

6. மற்றும் சில பதங்கள்

இவற்றை அடியிற் கண்டபடி மூன்று வரிசையாக எழுதிக் காட்டலாம்.

A	B	C
இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
முன்காலம்	தற்காலம்	பின்காலம்
ஆதிகாலம்	மத்தியகாலம்	அந்தியகாலம்

D. மற்றும் சில உதாரணங்கள்

1. பெரு———:பெருவழி, பெருநிதி, பெரும்படை,........
2. மலை———: மலை உச்சி, மலைவழி, மலை ரயில்.......
3. இராஜ———: இராஜ வேஷம், இராஜ நடை, இராஜ குடும்பம்...........
4. தலை———: தலைப் பிள்ளை, தலை நகர், தலை தீபாவளி. (இங்கு தலை என்பதற்கு "முதல்" என்ற பொருள் ஆகும்.)
5. ———மண்டபம்: நூறுகால் மண்டபம், பஜனை மண்டபம், கலியாண மண்டபம், கொலு மண்டபம்...........
6. ———கோல்: அளவு கோல், திறவுகோல்........
7. கால்: பாய்க்கால், வடிகால், நாற்றங்கால்.............

பாஷாபிவிருத்தி விளையாட்டுகள் :

E இவ்வார்த்தைகளைச் சேர்ந்து படமூலமாக விளக்கி எழுதிச் சுவரில் தொங்கவிடுவது நலம். பெரிய கடிதங்களில் இம்மாதிரி மரக் கிளைகளையும் வார்த்தைகளையும் தனித்தனியாகக் கொடுத்து வார்த்தைகளை ஆங்காங்கு அமைத்துக் காட்டச் செய்யவும். "காலம்" என்றதின் காட்டப்பட்ட எல்லா அடுக்கு வார்த்தைகளையும் கலந்து கொடுத்து அவைகளை ஆறு பாகமாகவும் ஒன்றன்கீழ் ஒன்று வரிசையாக வரும்படியும் பிரித்து வைக்கச் செய்யவும். விளையாட்டும் படிப்பும், படிப்பில் ஒரு ஆசையும் ததும்பி நிற்க இவ்விளையாட்டுகள் இன்றியமையாதவை. பாஷைவளர்ச்சியன்றி பொது அறிவு வளர்ச்சியும் காணப்படுகிறது. இது சம்பந்தமாக பிராசீன சம்பிரதாயம் ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது. மூட்டுப் பூச்சி அதிகம் இருந்தால் அதைப் போக்கடிக்க "குடி" "ஊர்" என்று முடியும் ஊர்களின் பெயர்களை 108 எழுதித் தொங்கவிடுதலைப் பரிகாரமாகச் சொல்லுவதுண்டு. மூட்டுப் பூச்சி போகுமோ, போகாதோ எப்படியாவது 108 பெயர்களை எழுத முயற்சிசெய்வது வழக்கம்,

ஊர் : தஞ்சாவூர், பெங்களூர், மேட்டூர் ....

குடி : ஆலங்குடி, ஆந்தகுடி, எட்டுகுடி ....

புரம் : கோபாலபுரம், திப்பிராஜபுரம், காஞ்சிபுரம், ...

பேட்டை : வண்ணாரப்பேட்டை, சைதாப்பேட்டை ....

காடு : பாலக்காடு, திருவெண்காடு, அரவங்காடு ....

சேரி : வெள்ளச்சேரி, புதுச்சேரி, மருதஞ்சேரி ....

இதுபோன்ற அப்பியாசத்தைக் காட்டிலும் மேலே சொல்லிய A, B, C. அப்பியாசங்கள் பாஷாபிவிருத்திக்கு நன்கு ஏற்றவையென்றே யான் திண்ணமாக நம்புகிறேன்.

பல அர்த்தங்கள் உள்ள வார்த்தைகள். திரிச் சொற்கள்)

தமிழ் மொழியில் ஒருவார்த்தையானது சந்தர்ப்பத்திற் கேற்றபடி பொருள் மாறுபடுவது சகஜம். சாதாரணமான சிறு பதங்களுக்கே ஒவ்வொன்றுக்கு 3, 4, 5 பொருள்கள் ஏற்படுகின்றன. அடுத்த பக்கத்திலுள்ள படத்தைக் கவனிக்கவும். இதைக்கொண்டு ஒரு வார்த்தையின் பொருளை அறிந்து கொள்வது பற்றி அப்பொருள்கள் விளங்கும்படியான சிறுவாக்கியங்களை அமைத்துக் காட்டுவதும், அமைத்துக் காட்டும்படி செய்விப்பதும் அவசியமாகும்.

முடி

1. சிறுவன் தன் முடிமயிரை நன்றாய் வாரியிருக்கிறான்.
2. அரசர் தலையிலுள்ள முடியில் 3000 ரத்தினங்கள் உள்ளன.
3. நான் கடிதம் எழுதி முடித்துவிட்டேன்.
4. இரண்டு கயிறுகளைச் சேர்த்து முடி.



இவ்வாறு படங்களைப்பார்த்தே வாக்கியங்கள் சொல்லத்தக்கபடி படங்கள் அமைத்துக் காட்டுவது பொருத்தமாயிருக்கும். அடியிற்கண்ட வார்த்தைகளை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாகும்.

நகை	கடை	குறி	நாடு
அடி	கொடி	தட்டு	கரை
நடை	குத்து	புலம்	அணை
மடி	குடி	கலம்	கட்டு
ஒளி	பிடி	ஆடு	பூட்டு

வார்த்தைகள் சம்பந்தமான வேடிக்கைகள்

A

வ	த	ன	ம்
வ	*	ன	ம்
வ	த	*	ம்
*	த	ன	ம்

க	மு	தை
க	மு	
க	*	தை
*	*	தை

த	வ	ன	ம்
த	*	ன	ம்
த	வ	*	ம்
*	வ	ன	ம்

ஒரு வார்த்தையில் ஒரு எழுத்தை நீக்கி அதே வரிசைக்கிரமமாகப் படிப்பதினால் ஏற்படும் வார்த்தைகளின் அர்த்தத்தைக் கண்டறிதல் ஒரு பயிற்சி ஆகும்.

B

த	ரா	சு
ரா	க	ம்
சு	ம்	மா

வி	பூ	தி
பூ	னா	ல்
தி	ல்	லை

கொ	சு	கு
சு	ட்	டு
கு	டு	மி

இடது பக்கமிருந்து ஆரம்பித்து வலப் பக்கம் நோக்கிப் படிக்கப் படும் வார்த்தைகளே மேலிருந்து கீழாக ஒவ்வொரு வரிசையாகப் படிக்கும்பொழுதும் காணப்படுகின்றன. உதவி, விளைவு, தவளை, அரசு, ரசம், சும்மா, காவடி, ரயில், டில்லி இவைகளை இம்மாதிரி சதுரங்களில் அமைத்துக் காட்டவும். இவைபோல் A, B க்குச் சரியான வார்த்தைகளைச் சேர்த்து இங்கு காட்டியமாதிரி அமைத்துக் காட்டி அவற்றின் உட்கருத்துகளையும், பொதுவான அழகையும் எடுத்துக் காட்டுவதும் உசிதமாயிருக்கும்.

C. **இருச்சொல் அலங்காரங்கள்**

நம்முடைய தமிழ் பாஷையில் இருச்சொல் அலங்காரங்கள் என்ற ஒரு பகுதி யிருப்பதைப் பலர் அறிவார்கள். அவற்றைப் படித்துப் பார்த்து அவைபோன்ற சிறு சிறு வாக்கியங்கள் செய்து இரண்டு வாக்கியங்களுக்கு ஒரு வார்த்தை விடையாக வரும்படி காட்டுவது நன்றாயிருக்கும்.

உதாரணம்:—

இரண்டு கேள்விகளுக்கும் பொருத்தமான ஒரே விடை:—

நாலு எட்டு பதினாறு ஆவதேன்? விளக்குமாறு தேய்வதேன்?	} பெருக்கப் பெருக்க
ஒன்று முக்கால் ஆவதேன்? கால் கல் ஆவதேன்?	} கால் போக
செவ்வாய் விடிவதேன்? நிலா மறைவதேன்?	} திங்கள் போக

வம்புப் பேச்சு பேசுவதேன் ?
பல்லாங்குழி ஆடுவதேன் ? } பொழுது போக்க

உண்மையை உரைக்கும் பாஷைப் பிரிவுகள்

சங்கீதம்:—பாடவோ, கேட்கவோ சரியான நேரமும், இடமும் அவசியம். மௌனமாக அதைக் கேட்டு ஆனந்திப்பது அவசியம். பக்திரஸமான பாட்டுகள் மனதை உருக்கி விடுகின்றன. கருத்தை அறிந்து பாடுகிறவர்கள் தமது பாட்டுகளினால் கேட்போர் மனதைக் கவர்ந்து விடுவார்கள். பள்ளிக்கூடங்களில் பாட்டு முக்கியமான பாடமாக இருப்பது அவசியம். பாடத்தெரியாதவர்கள் இல்லாவிடினும் கிராமபோன் பிளேட்டுகளைக் கேட்டு எவ்வளவோபேர் சங்கீதஞான முடையவர்களாக யிருக்கிறார்கள். ஆனால் தற்சமயம் கிராமபோனை நேரம், இடம் இவற்றைக் கவனியாமல் சந்தைத் தெருவில் வைத்து விடுவார்கள். கேட்கிறார் பலர், கேட்காமலே செல்லுகிறார் பலர். பாடகர்கள் ஒருக்கால் நேரில் வந்து விட்டால் "சந்தைத் தெருவில் குடியிருந்து கெட்டேனே" என்ற பழமொழியை ஞாபகம் வைத்துக்கொண்டு இனி கிராமபோன் பிளேட்டுக்குப் பாடக்கூடாது என்று மறுத்து விடுவார்களோ என்னமோ? பள்ளிக்கூடங்களில் ஒரு கிராமபோனும் சில ரிகார்டுகளும் இருப்பது அவசியமாகும். வாரம் இருமுறையாவது எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து பாடுவது உசிதமாகும்.

சித்திரம்:—இதுவும் உள் கருத்தைக் காட்டும் ஒரு பாஷையேயாகும். மனதில் உள்ள கருத்துகளை யெல்லாம் சொற்களில் சொல்லாமல் சித்திர ரூபமாகக் காண்பிக்கிற ஒரு சாஸ்திரத்தை யான் மிகவும் பாராட்டுகிறேன். பாட்டுகளைச் சித்திர ரூபமாய் அமைத்துக் காட்டுவது மிகவும் உத்தமமான முறை என்பது எனது கொள்கை. அதற்கேற்ப உதாரணமாக இங்கு ஒரு பாட்டை விளக்கிக்காட்டி யிருக்கிறேன்.

பாட்டுகளைப்படித்துக் கேட்டல்

இப்பிரிவின்கீழ் வரக்கூடிய உதாரணங்கள் பின்வருமாறு:—

ஏணியேற்றம் : திருமாலின் பெயர்கள்:—

அண்டம் அளந்தவரே அரியென்னும் காரணரே,
கொண்டல் நிறமுடைய கோபால நாரணரே,
மச்சாவதாரம் கொண்ட மாயன் பெருமாளே
மெச்சவே இவ்வுலகில் வெளிப்பட்ட திருமாலே
கூர்மாவதாரத்தைக் கூசா எடுத்தவரே
நேர்மையுடனமுதம் நிலைபெறக் கொடுத்தவரே
வராகவதாரத்தை வாசாகப் பெற்றவரே
பாராமுகம் இல்லாமல் பார்த்தனை யுற்றவரே
நரசிங்க வுருவெடுத்து நலமுடன் வந்தவரே

திடமுடன் அனைவருக்கும் தினமுத்தி தந்தவரே
வாமனவதாரம் வந்தெடுத்த மாயவரே
தாமனென்னும் பெயரைத் தரித்திரே தூயவரே
பரசுராம வடிவெடுத்துப் பார்தனிலே வந்தவரே
முறையுடன் தேவரெல்லாம் மூர்ச்சையாய்த்தாமெடுக
இராமவதாரத்தில் இராவணனைக் கொன்றவரே
இதமாக இவ்வுலகில் எத்தனையோ வுயிர் சிதைக்கும்
பலபத்ர வுருவகனைப் பார்த்தேன் கலப்பையினல்
வலமாகப் பைந்துளபம் மார்பிலணிந்தவையா
கண்ணனெனும் பெயரைக் களிப்புடன் கொண்டவரே.

சிவனின் பெயர்கள்

பஞ்சபாண்டவர் வனவாசம்

அரவாபரணனே ஐயா உனக்கபயம்
சங்கரா நான் சரணம் சதாசிவா உனக்கபயம்
வெள்ளை ரிஷப மேறும் வித்தகா நான் சரணம்
மாபூஷணம் தரித்த மகாதேவா உனக்கபயம்
முக்கண் படைத்தவரே முதல்வரே உனக்கபயம்
திரிபுரமெரித்த வெங்கள் தேவா உனக்கபயம்
காமனைக் கண்ணு லெரித்த கடவுளே நான் சரணம்
எமனை வுதைத்தவரே ஈசா வுனக்கபயம்
கங்கை யணிந்தோனே உடுக்கை தரித்தோனே
திங்களைத் தன் சிரசில் தரித்த சிவனரே.

மேலேயுள்ள பாட்டுகளைப் பிள்ளைகள் பலதரம் கேட்பது வெகு உபயோகமாயிருக்கும்.

நாட்டியம்

இதுவும் மனத்தினுள்ள கருத்தை தேகத்தின் அழகான அமைப்புகளால் விளக்குவது. நான் ஒரு சமயம் ஒரு நாட்டியக் கச்சேரிக்குச் சென்றிருந்தேன். கோவிலில் நடக்கும் நாட்டியங்களையும் பார்த்திருக்கிறேன். உள்ளன்போடு நடிக்கிறவர்கள் தமது உடம்பு அழகு அனைவற்றையும் தமது அபிநயங்களினல் ஈசுவர கைங்கரியத்திற்காக அர்ப்பணம் செய்வது போன்ற ஒரு எண்ணமே எனது மனதில் உதித்தது. குழந்தைகள் இம்மாதிரி நாட்டியங்களைக் கண்டு சந்தோஷிப்பது நல்லது.

நாடகம்:—ஒளவையார் அருளிச் செய்தபடி முத்தமிழில் ஒன்றுன இப் பகுதியையும் குழந்தைகள் பார்த்து ஆனந்திப்பது வெகு பொருத்தமானது. ஆயினும் தற்காலத்தில் நாடகத்திற்கு மதிப்பு குறைந்துவிட்டது. எல்லாம் பேசும் படக்காக்ஷிகளிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் குழந்தைகள் பார்க்கக்கூடியதற்குத் தகுந்த வேறு

நாடகங்கள் இருப்பது நல்லது. பொம்மலாட்டம், ஹரிச்சந்திர நாடகம், இராமநாடகம், நந்தன் சரித்திரம் இவை எல்லாவித ரஸங்களும் பொருந்தியவை. அபிநயங்களும் காட்டக்கூடியவை. பாட்டுகளும் சம்பாஷணைகளும் மேலான மன உணர்ச்சியைக் கொடுக்கக்கூடியவை. இவற்றில் பற்பல அம்சங்களை வகுப்பில் நடித்துக் காட்ட ஏற்பாடு செய்வது நல்லதாகும். தற்காலத்தில் பாட்டைவிட சம்பாஷணைகளையும் அபிநயங்களையுமே அதிகமாகக் கொண்டாடுகிருர்கள். அவற்றையே நாம் பின்பற்றுவது நல்லதாகும். நீதிஸ்தல சம்பாஷணைகளில் சுலபமானவை; புராண நாடகங்களில் இலகுவானவை போன்ற விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம்.

பலர் பேசும் பாஷையைக் கேட்டுக் களித்தல்

இராப் பிச்சைக்காரன் ஒருவன் பாடிவருவதை நான் கேட்டதுண்டு. வெகு சுலபமான நடையில் அவன் பாடி வருவதுண்டு. இவைகள் காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வாகனப் பாட்டுகள் ஆகும்.

வரதா பாலைக் குடிக்குமாம் பூனை — வரதா
படையெடுத்து வருமாம் சேனை — வரதா
குயவன் பண்ணுவது பானை — வரதா
வரதராஜர் ஏறுவது யானை.

வரதா கண் தெரியாதவன் குருடன் — வரதா
காது கேட்காதவன் செவிடன் — வரதா
ஒளிந்து ஓடுபவன் திருடன் — வரதா
வரதராஜர் ஏருவது கருடன்.

வரதா கையில்பிடித்து உழுவது ஏர் — வரதா
மண்சுவர் கட்டுவது சேறு — வரதா
மரத்தின் அடியில் இருப்பது வேர் — வரதா
வரதராஜர் ஏறுவது தேர்.

இவன் பள்ளிக்கூடம் படித்தறியான். ஆனல் பாஷையை நன்கு கேட்டு அப்பியாசம்பண்ணி சொந்தமாக பாட்டுகட்டும் யோக்கியதையைப் பெற்றிருக்கிறன். பாட்டு குறையுள்ளதா யிருப்பினும் அவனை ஊக்கம் மெச்சத்தகுந்தது. குடுகுடுப்பாண்டி காலையில் வந்து வீட்டிலுள்ளவரையும் குழந்தைகளையும் ஸ்தோத்திரம் செய்தோ அல்லது மற்றும் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லியே பிச்சை கேட்கிருன். அவனது வார்த்தைகள் பொறுக்கி எடுத்த வார்த்தைகளைக் கோத்தாபோல் காண்கின்றன.

D. எண்பதுகோடி நினைந் தெண்ணுவன.

குழந்தைகள் பாட்டிலுள்ள இந்த அடியைச் சொல்லிக்கொடுக்கையில் குழந்தைகள் தமது மனதில் என்னென்ன நினைத்துக்கொண்

டிருக்கிறார்கள் என்று கேட்க நேர்ந்தது. உண்மையைச் சொல்லச்செய்ய சில முறைகளை அனுஷ்டிக்கவேண்டி யிருக்கிறது. முதலில் பிள்ளைகள்.

(I) "பாடத்தைக் கவனிக்கவேண்டும், பாடம் நன்றாய் வரவேண்டும்" இம்மாதிரி நினைக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். மறுபடி பக்குவமான சந்தர்ப்பத்தை அமைத்துக்கொண்டு கேட்டதில் அடியிற் கண்ட பதில்கள் கிடைத்தன.

மயிலாப்பூரில் என் அக்காளைப் பார்க்கவேண்டும்.
புதிதாகவாங்கின செருப்பைப்பற்றி நினைத்துக்கொண் டிருக்கிறேன்.
சிரங்கு உபத்திரவம் பொறுக்க முடியவில்லை.
நாளைக்கு இங்கிலீஷ் டிக்டேஷனாயிற்றே என்று ஞாபகம்.
படம் ஒட்டவில்லையே என்று நினைக்கிறேன்.
நீர் வீழ்ச்சியைக் காணவேண்டும்.
கிராமத்திற்குச்சென்று குழந்தைகளைப்பார்த்து வரவேண்டும்.
நான் எப்பொழுது வீட்டிற்குப் போவேன்.
கைவேலை டிராயிங் இருந்தால் தேவலை.
40 பக்கம் நோட்டுப் புஸ்தகம் கொண்டுவர மறந்துவிட்டேனே.
பந்து ஆட வேண்டும்.

மற்றொரு சமயம் நேரிட்டது. பரீக்ஷைகள் முடிந்தசமயம். ஊரிலும்வெளி ஊரிலும் உற்சவம். "உன் ஞாபகம் எங்கே உண்மையை உரை" என்று கேட்டதில் பின்வருமாறு விடைகள் கிடைக்கலாயின.

(2) பரீக்ஷை தேறினால் கர்ப்பூரம் கொளுத்துகிறேன்.
பரீக்ஷை மார்க்கு தெரியவேண்டும்.
மத்தியானம் மயிலாப்பூர் தேர் பார்த்து வரவேண்டும்.
மத்தியானம் கோயிலுக்குப் போகவேண்டும்.
இராஜாவைப் பார்க்கவேண்டும்.
மூக்குத்தி தொலைந்து விட்டது. அம்மாள் கோபித்துக் கொள்வாளோ என்னவோ?
லீவில் அண்ணனுக்குக் கலியாணம் நடக்கப்போகிறது.
எங்கேயாவது ஊருக்குப்போனால் தேவலை.
அறுபத்து மூவர் உற்சவம் பார்க்கப் போகிறேன்.
அடுத்த வருஷம் இங்கே படிக்கமுடியாதே என்று வருத்தம்.
இந்தப்புஸ்தகம் ரொம்ப அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. இதை யார் எழுதினது.

நேரில் காணும் காட்சிகளைப்பற்றிப் படிப்பது

தேர் உற்சவம்:—பலபேர் தேரை இழுத்தார்கள். ஹரோஹரா என்று சத்தம் எங்கு பார்த்தாலும் எழுந்தது. வெயில் கடுமையாய் இருந்தது. கால் கொதிக்கிறது. பல பேர் தேர் இழுக்கிறவர் காலில்

குளிர்ந்த ஜலம் ஊற்றுகிறார்கள். அவர்களுக்கு சர்க்கரை நீர்மோர் வழங்குகிறார்கள். சிலர் குடை பிடிக்கிறார்கள். மற்றும் சிலர் விசிறி விசிறுகிறார்கள். மேள சத்தம், ஜனங்கள் சத்தம், தேர் இழுக்கிறவர்கள் சத்தம், இவை ஓங்கிக்கொண்டே யிருந்தன.

சுவாமி வீதிவலம்:—அன்று இரவு அலங்காரத்தைப் பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும். என்ன விமரிசையான பல்லக்கு! என்ன பூ அலங்காரம்!! சுவாமியின் முகத்தின் என்ன தேஜஸ்!!! கைலாஸபதி என்றால் கைலாஸபதிதான். பகவான் உட்கார்ந்திருக்கிற ஒரு அழகே போதும். இராத்திரியெல்லாம் பார்த்துக்கொண்டே யிருக்கலாமே. அந்த இடத்தை விட்டு வரவேண்டுமே என்று இருக்கிறது. பாண வேடிக்கைதான் என்ன இரண்டுமணி நேரமா? காதைத் தொளைத்து விட்டது. என்னவோ உற்சவம் பிர்ம்மானந்தம்தான்!

இயற்கைக் காட்சிகள்

(1) இரவு நல்ல நிலா. ஆகாயத்தில் மேகம் ஒரு பஞ்சு பறந்தாப் போல் பரவி யிருக்கிறது. நீல ஆகாயத்தில் சந்திரனும் குளிர்ந்த நிலாவும் பார்க்கப் பார்க்க என்ன ஆனந்தம். எங்கு பார்த்தாலும் ஒரே நிச்சப்தம்தான். தெரு நாய் ஒன்று இரண்டு குலைத்துத் தூக்கத்தைக் கெடுக்கிறது.

(2) சாயங்கால வேளையாயிற்று. ஆற்றங்கரையோரம் சூரியன் மலைவாயில் விழும் சமயம். காக்கை கூட்டம் கூட்டமாய்ப் பறந்து செல்லுகின்றன. ஜலம் சல சல என்று ஓடுகிறது. மீன் மேலே வருவதும் போவதுமா யிருந்தது. மாட்டுக்காரப் பையன்கள் மாட்டை ஓட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்.

(3) **இயற்கை மாறுதல்களும் பிராசீன வார்த்தைகளும்**

"சித்திரைப்பனி சிவ சிவா என்று போகும்.
சித்திரை வந்திடும் செல்வம் தந்திடும்.
ஆடியில் விதை தேடி விதை.
புரட்டாசியில் பொன் உருகக் காயும், மண்ணுருகப் பெய்யும்.
ஐப்பசித் தூரல் அழுகல் தூரல்.
ஐப்பசி அடைமழை பெய்யும்.
கார்த்திகைத் தூரல் கிழத்தூரல்.
கார்த்திகை மழை கதவைத் துளைக்கும்.
மார்கழிப் பனி மனமும் குளிரும்.
தைப் பனி தரையும் குளிரும்.
மாசிப் பனி மச்சைத் துளைக்கும்.
பங்குனிப்பனி பல்லைக் கட்டும்."

இம்மாதிரி மாதங்களையும் அவற்றின் பருவங்களையும் குறித்து பிராசீன வாக்கியங்கள் நடமாடிவருவதைக் கேட்டறிந்து எழுதிப் படித்துக்கொள்ளுவது நலம்.

(4) புஷ்பங்களைப்பற்றின விடுகவிகள்

(a) மஞ்சள் மஞ்சளேர் என்றிருக்கும் புஷ்பம்
மாதர் தலையில் அணியும் புஷ்பம்
அடுக்கு அடுக்கு போன்ற இதழ்கள்
அழகான மெல்லிய இதழ்கள்.

(b) செடியோ முட் செடி
பூவோ கமகம வென்றிருக்கும்
இராணி முடியில் அணியும் புஷ்பம்
அத்தர் 'எடுக்கும் புஷ்பம்
பூவுண்டு காயில்லை.

(c) தேனீக்கள் வந்துபோகும் கோட்டையாம்
மஞ்ச சக்கர கோட்டையாம்
கோட்டை வீரர் கையில் பட்டாக்கத்தியாம்
கத்தியோ சூரிய ஒளி வீசும் கத்தியாம்.

சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமிது

தவசிகள் காட்டில் மௌனம் சாதித்து தங்களது மனதை ஒருமைப்படுத்தி எண்ணம் எல்லாவற்றையும் கடவுள் பால் இருத்தித் தவம் செய்கிறார்கள். சகலவித ஆசைகளைத் துறந்து விடுகிறார்கள், நிஷ்டையிலேயே பல நாள் இருந்து விடுவார்கள். அப்பொழுது அவர்களிடம் ஒரு தேஜஸ் பிறக்கிறது. ஒரே மன வேகமும உண்டாகிறது. பல நாள் தியானத்திலிருந்து பிறகு ஏதாவது அவர்கள் வாக்கு சொல்வார்களானால் அவ்வாக்கு பலித்து விடும். அப்பேர்ப்பட்டவர்களைக் கண்டு ராஜாக்களும் அவர்கள் மனது குளிரும்படி உபசாரம் செய்து அவர்களின் இனிய ஆசிர் வாதத்தைப் பெற முயலுகிறார்கள். சகல ஜீவராசிகளின் சிருஷ்டி கர்த்தாவகிய உண்மைக் கடவுளையே நாடி தவம் செய்யும். இவர்கள் ஏதாவது கோபித்து சபித்து விடுவார்களோ என்று அச்சம் கொள்வதும் உண்டு. மௌனத்திலும் பாஷையிருக்கிறது என்றே நினைக்கிறேன்.

பச்சைக் குழந்தையிடத்திலும் பாஷையிருக்கிறது

மூன்று மாஸத்துக்குட்பட்ட ஒரு பச்சைக் குழந்தை ஆகாரம், தூக்கம் இவற்றையே பிரதானமாகக் கொண்டிருக்கிறது. பசி தூக்கம் வந்துவிட்டால் கையில் பிடிமடமாட்டேன் என்கிறது என்று தாயார் சொல்லுகிறாள். சிலசமயங்கள் மல்லாக்கப்படுத்துக் கொண்டே உயரப்

பார்க்கிறது. யாருடன் பேசுகிறது, குலாவிக் கொஞ்சுகிறது. கையைக் காலை உதைத்துக் கொள்கிறது, விடியற்காலம் எழுந்திருக்கிறது. பேச ஆரம்பிக்கிறது. பாஷை என்னமோ நமக்குப்புரியவில்லை. ஈசவரனுக்குத் தான் தெரியும். ஈசவரனுடன் தான் பேசிக் கொண்டிருக்கிறது போலும். இது ஒரு பெரிய ஆச்சரியம், அதன் ஆத்மசக்தி வளர்ந்து கொண்டே வருகிறது.' மல்லாக்கப் படுத்திருக்கிறது ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டு குப்புறப்படுக்கப் பார்க்கிறது. இதர்க்கு எவ்வளவு நாள் பிரயத்தனம், இவ்வளவுதான் பிரயத்தனம் என்று சொல்லுவதற்கில்லை. தானே சாமாளித்துக் கொள்கிறது. கடைசியாக அது குப்புறப்படுத்துக் கொண்டு விட்டது. மறுபடி முகத்தைதாமே நிமிர்ந்து பார்க்கப் பிரயத்தனம். அதன் ஆத்ம சக்திவளர்ந்து கொண்டே வருகிறது. அதேமாதிரி பாஷையும் ஆத்மசக்தியும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பட்டிருக்கிறது. ஆத்மசக்தி யதிகரிக்க, பாஷை யதிகரிக்க நாம் தக்க சந்தர்ப்பங்களை அமைப்பது அவசியம். எல்லோரும் குழந்தைகளாகவே இருந்துவிட்டால் பாதகமில்லை, விசாரமில்லை. ஆனால் குழந்தை வளர்ந்து கொண்டே யிருக்கிறது. தாயாரும் பக்கத்தில் இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால் குழந்தையினிட மிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்று உண்டு. அதுதான் நினைக்கிறதை நினைக்கிறபடியே பாஷையின் மூலமாகவோ மற்றும் எவ்வாறோ நமக்குத் தெரியப்படுத்துகிறது. அது உண்மையை நாடுகிறது. ஆகவே நாமும் உண்மை வழியைநாடி உண்மையான பாஷையை அதிக ஆச்சரியமான பாஷையை, இனிமையான பாஷையை அதற்குச் சொல்லிக்கொடுப்பதற்கு ஏற்ற விஷயங்களையும் முறைகளையும் கண்டறிந்து குழந்தை உலகத்தைப் பிரகாசிக்கச் செய்வதில் பங்கு எடுத்துக் கொள்வோமாக.

(அடுத்த சஞ்சிகையில் தொடரும்)

(All Rights Reserved)

புதிய உயர்தரக் கல்விமுறையில் தமிழுக்குரிய இடம்

N. முகம்மது, தமிழாசிரியர், உடுமல் பேட்டை.

முன்னுரை

அன்பு நிறைந்த அவைத்தலைவர் அவர்களே !

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
உலகியலறிவோடு உயர்குணம் பலவும்

வாய்ந்த உத்தம ஆசிரியர்களே, ஆசிரியைகளே,

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேயவாயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங்காலை

ஒருவழித் தோன்றியாங்கு,

பல்வேறு கலைகளைத் தேர்ந்து பலப்பல தூரமான இடங்களினின்றும் போந்து உயர்வான காரியத்தை உருவாக்க ஈண்டுக்குழுமியுள்ள உங்களின் திருமுன், இச்சிறிய கட்டுரையைச் சமர்ப்பிக்கும் பாக்கியத்தை உளமுவந்தருளிய இம்மாநாட்டின் தலைவரவர்கட்கு எனது மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன். இக்கட்டுரையில் யான் கூறப்போகும் விஷயம், பெரிதும் கருத்துவேற்றுமைக்கு இடனாயிருக்கலாம். யான் கூறுவதே முடிந்த முடிபாகாது. வழுக்கள் மலிந்திருக்கலாம். சீரிய குணமுடைய தாங்கள் குற்றத்தை எடுத்துக்காட்டிக் குணத்தைக்கொள்வீர்களென்ற முழுநம்பிக்கையுடன் முன்வந்துள்ளேன்.

கற்றுணர்ந்தடங்கிய கணக்காயர்களே ! கல்வியின் எல்லைகண்ட நம் பரதகண்டம், பலப்பல இடையூறுகளான், கல்வியாளர்களைப் பெற்றெடுக்கும் பெருமையைப் பெறாது சீர்குலைந்து வருகின்றது. அதிலும் மக்களை நன்னெறியிலுய்த்தற்குரிய கல்வி நம் நாட்டில் ஒருசிலர்க்கேயுண்டு. அக்கல்விதானும் அடிமைகளை உற்பத்தி செய்தற்குச் சாதனமாய் விளங்குவது கண்கூடு. இதுகண்ட இந்திய அறிஞர்கள் உயர்தரப்பள்ளிகளில் இதுபோழ்துநிலவும் கல்விமுறையைத் திருத்திப்புதுக்க வேண்டுமென்ற சீரிய எண்ணமுடையராய் மேடைகள் போந்து இது குறித்துச் சொற்பொழிவாற்றியும் புதினத் தாள்களில் கட்டுரைகளைப் பொறித்தும் வந்தனர், வருகின்றனர்.

இவர்கள் இங்ஙனம் கூறக் காரணம் என்னை? இக்காலக் கல்விமுறை, ஒருவனை அறிஞனாக்குவதில்லையா? உத்தியோகம் செய்யும் ஆற்றலுடையவனாய்ச் செய்வதில்லையா? ஆக்குகிறது. பின் என்னை காண் குற்றம் எனக் கடாவுவீர்.

கல்வியானது, மக்களை, நல்லறிவிலுய்த்து, பல்வகைத் துறையிலும் சமூகத்தின் திறமையாளர்களாய்ச் செய்தல் வேண்டும். மக்களை, சமூகத்தின் தொண்டர்களாய், தனக்கென வாழாப் பிறர்குரியாளர்களாய் அரசனும் அறிஞரும் விரும்பும் ஞானமுடையவர்களாய் தனிப்பட்ட முறையிலும், விழுப்பந்தரும் ஒழுக்கத்தில் நின்று கடனாற்றுபவராய் ஆக்கல்வேண்டும். இக்காலக் கல்வி அங்ஙனம் ஆக்காமையின் அறிஞர்கள் அதைத் திருத்தியமைக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். சுருங்கக் கூறின் மக்களை மாக்களாக்காது மக்களாக்குதலே கல்வியின் முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும். இம்முறையில் இதுபோழ்துள்ள கல்விமுறை, தன்னையுடையாரை நூலுணர்வு சிறிதுமின்றி நெட்டுருச் செய்யவைத்து விடைத்தாளில் விடுக்கச்செய்து சில அம்சங்களைக் கொடுத்தலிலே முக்கிய நோக்கமாய் நிலவுகின்றதென்பதும் அதைத் திருத்தியமைத்தல் அறிஞர் கடன் என்பதும் வெளிப்படை. நிற்க,

இதுபோழ்து இச்சீர்திருத்தக் கல்வியைப் பற்றிப் பேசுவோரும் எழுதுவோரும் தமிழைத் தவிர மற்ற பாடங்களைக் குறித்தே பெரும்பாலும் பேசுகின்றனர், எழுதுகின்றனர். தமிழ் மொழியைப்பற்றி எண்ணுவோரே யில்லை. ஓரிருவர் சிந்தனையுடன் பேசினாலும் எழுதினாலும் அவற்றை, ஆங்கில அணங்கின் மோகவலையிற் கட்டுண்டு கிடப்போர் கேட்டலும் உணர்தலுமின்றி அலக்ஷிய புத்தியுடன் வாளாவிருந்துவிடுவர். தன் தாயின் தாழ்ந்தகுரல் தனயர்களின் காதில் வீழாதிருக்குங் காரணந்தான் யாதோ அறிகிலம். இந்தியாவிலே தமிழ் நாட்டில்தான் தாய் மொழியில் ஆர்வமற்ற தன்மையும் அதை வளர்க்குந் தன்மையும் காணப்படவில்லை. வங்காளம் முதலிய நாடுகளிலோவெனில், தாய்மொழியின் ஆர்வமும், அபிமானமும் ஆதரிக்கும் வன்மையும் வேரூன்றிக் கிடக்கின்றன. சென்ற இரு திங்களின் முன், வங்காளப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கவியரசர் தாகூர் ஆங்கிலமொழியில் விற்பன்னரா யிருந்தும் தனது தாய்மொழியாம் வங்க மொழியிலேயே சொற்பொழிவாற்றினார். இதை ஒவ்வோர் தமிழனும் உணர்வானாக. உலகம் போற்றும் உத்தமராம் காந்தியடிகள் சென்னையில் நடந்த ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தில் "தமிழனைப்போல் தாய்மொழியிற் பற்றற்றவனை யாம் கண்டதில்லை" என ஏசுகின்றார். இப்பெரியார்களின் பொன்மொழிகளைக் கேட்டபின்னும் தமிழன் வாளாக் கிடக்கின்றான். அந்தோ! இனியேனும் ஆங்கிலம் பயின்ற தமிழர்கள், புதுக் கல்விமுறையில், தமிழுக்குரிய ஸ்தானத்தைப்பற்றிப் பேசவும்

எழுதவும் வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுதலே இக் கட்டுரையின் முக்கிய நோக்கம்.

ஆமாம் ஐயா! ஈதென்னை வம்பு. இக்காலக் கல்வி முறையில் தமிழ் மொழிக்கு என்ன ஸ்தானம் அளிக்கப்படவில்லை, என்ன குறைகள் காணப்படுகின்றன என வினவுவீராயின், எத்துணையோ குறைகள் காணப்படுகின்றன. அவற்றில் சிறப்பாக மூன்றைக் காட்டலாம்.

1. **தாய்மொழியில் மாணவர்க்குக் கற்பிக்கும் வழக்கமின்மை**
உலகில் உள்ள எல்லா நாடுகளும் தத்தம் பள்ளிகளில் தாய்மொழியிலேயே பாடங்களைப் போதிக்கின்றன. இந்தியாவிலும் வங்காளம் முதலிய நாடுகளில் இவ்வாறு செய்கின்றனர். இதனால் இப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும் தாய்மொழியில் வன்மைபெற்றவராய் விளங்குகின்றனர். தமிழ்நாட்டிலோவென்றால் இதற்கு முற்றிலும் முரண்பாடு காணப்படுகின்றது. பாடங்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலேயே போதிக்கின்றனர். சிற்சில பள்ளிகளில் தமிழையும் ஆங்கிலத்திற் போதிப்போருளர். அம்மம்மா! கொடுமை, கொடுமை. இங்ஙனம் செய்கின்றமையால் ஓர் உயர்வகுப்பு மாணவனிடம் முத்தமிழ் என்றால் என்னவென்று நீங்கள் வினவ்வீராயின், அவன் செந்தமிழ், கருந்தமிழ், வெள்ளைத்தமிழ் என்று கூறப் பின்னிடான். தமிழிலே அவன் உரையாடும்பொழுதும் 100-ல் 90 ஆங்கிலப் பதங்களையும், 5 வடமொழிப் பதங்களையும், 5 கொச்சைத் தமிழ்ப் பதங்களையும் பேசுவான். எனவே இதை நாம் கண் கூடாகக் காணும் பயனே விளைகின்றது.

2. **தாய் மொழியில் மாணவர்க்குப் பற்றை யுண்டாக்காமை.**
மாணவர்களே, ஓர் நாட்டிற்கு அங்கமாயிருத்தலால் அவர்கட்கு முதலில் மொழிப்பற்று அரும்பல் வேண்டும். அதனால் நாட்டுப் பற்று மிக எளிதில் மலரும். விடுதலை என்கிற கனி தோன்றும். எனவே, தமிழ் நாட்டில் மொழிப்பற்று மிகக் குறைவாய் இருத்தலால் அவர்கட்கு நாட்டுப் பற்று உண்டாவதே யில்லை. தமிழ் நாட்டு மாணவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் போழ்தும் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். தமிழ் நாட்டை அடுத்த மலையாளத்தார், எத்துணை ஆங்கிலங் கற்றவராயினும், எத்துணைப் பெரிய அரசாங்க உத்தியோகஸ்தராயினும், ஒருவரையொருவர் சந்திக்கும் போழ்து மலையாள பாஷையிலே உரையாடுதல் இன்னும் காண்கின்ற விஷயம். தமிழ் நாடு இவ்விஷயத்தில் ஈன நிலையடைந்திருப்பதற்குக் காரணம் பள்ளியில், மக்களின் மனதில், தாய்மொழிப் பற்றென்னும் விதையை யூன்றாமையேயாகும்.

3. தமிழில் போதிக்கப்பட வேண்டிய, சரித்திரம், பூகோளம் முதலிய அறிவியற் பாடங்கள் கூட தமிழிற் போதிக்கப்படாமை. இது குறித்து யான் மேலே கூறப் போவதால் ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை.

எனவே இக்குறைகள் எல்லால் நீங்கப் புதுக் கல்வி முறையில் தமிழுக்கு எத்தகைய இடம் அளித்தல் வேண்டு மென்பதைச் சிறிது கூறுவாம்.

1. **உயர்தரப் பள்ளிகளில் பத்தாவது வகுப்புவரை தமிழையே முதன் மொழியாகச் செய்தல்.**

பாடசாலைகள் சமூகத்தின் பிரதிபிம்பம் என்று கூறப்படுவதால், இது போழ்து நாட்டில் நிலவும் புத்துணர்ச்சியை அறிந்து மக்களுக்குச் சிறுக சிறுகச் தமிழ்ப் பற்றுண்டாக்குதல் புதுக் கல்வியின் முக்கிய நோக்கமா யிருத்தல்வேண்டும். இப்பற்றுத் தழைக்க வேண்டுமேல், தமிழை முதன் மொழியாகவும், ஆங்கிலத்தைக் கட்டாய இரண்டாவது மொழியாயும் ஆக்கலாம். யான் இவ்வாறு கூறுவதால் ஆங்கிலத்தை வெறுப்பவனென்றோ. அம்மொழியின் அழகையும், மதிப்பையும் குறைப்பவனென்றோ. அறிஞர்கள் எண்ண வேண்டா. ஆங்கிலம் உலகத்தின் பொது பாஷையாய் நிலவும் பேறுபெற்ற சிறப்புடையது. உலகில் பலப்பல துறைகளில் வல்லோர் இயற்றிய நூல்களைத் தன்னிடத்திலே கொண்டு விளங்கும் பெருமை படைத்தது. பிரபஞ்ச விலாசத்தில் வல்ல ஷேக்ஸ்பியரைப் பெற்றெடுத்த மொழி. எனவே, ஆங்கிலத்தை ஒவ்வொருவரும் படித்தல் அவசியம். ஆனால், அதுமுதல் மொழியாகப் பள்ளியில் நிலவக் கூடாதென்பது தான் எனது கருத்து. ஏனென்றால், மனோதத்துவ நூலின்படி மக்கட்கு, எண்ணங்களும் கருத்துக்களும், முதலில், தாய் மொழியில் தோன்று மென்பதும் அது பிற பாஷையிற் பின்பு மொழி பெயர்க்கப்படுகின்றதென்பதும் அறிஞர்கண்ட உண்மை. இது போழ்து தமிழ் நாட்டில், மாணவர்க்கு ஆங்கிலத்தில் கருத்துக்களை யறியவைப்பது, தாய்ப்பாலை விடுத்துப் புட்டிப்பாலை யூட்டுவதை ஒக்கும். அன்றியும் தென்னிந்தியக் கல்விச் சங்கம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை முதன் மூன்று பாரங்களில் மட்டும் தமிழே முதன் மொழியாயிருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றது. இது ஓரளவில் உண்மையேயாயினும், மக்கள் தாய் மொழியில் சிறந்து விளங்கவேண்டுமேல், பத்தாவது வகுப்புவரைத் தமிழே முதன் மொழியாயிருத்தல் வேண்டு மென்பதை எவரும் மறார்.

2. **தமிழ்நாட்டில் வடமொழி.** தமிழ் நாட்டில் தமிழன்னைக்குப் பிறந்து தமிழ்ப்பாலையுண்ட மக்கள், உயர்தரப் பள்ளியில் வடமொழியை, முதல் பாரம் இரண்டாவது பாரங்களிலிருந்து எடுத்துக் கொள்கின்றனர். இவர்க்குத் தாய் மொழியின் தொடர்பு, இத்துடன் அற்று விடுகின்றது. அம்மம்ம! இவர் நிலை மிக மிக இரங்கத் தக்கது தமிழ் நாட்டில் தமிழோடு பல்லாண்டு பழகும் தொடர்புடையாராகிய இவர்கள், தமிழில் நூல்களைப் படித்துச் சுவைக்கும் சக்தியற்றவராய் விடுகின்றனர். இதனால் யான் வடமொழியை வெறுப்பவனென்று யாரும் எண்ணுதல் கூடாது. வடமொழி மிகத் தொன்மையான மொழி. தமிழோடு நெடுங்காலத் தொடர்

உடையது. உலகம் போற்றும் காளிதாசனைத் தன்னகத்தே யுடையது. நான்கு வேதங்களையும் அதன் அங்கங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் பெருமையுடையது. எனவே, இதையும் கற்றல் மிக அவசியம். ஆமாம் ஐய நீவிர் கூறுகின்றது மிகமிக முரண்படுகின்றதே எனக் கூறுவீர். இவ்விஷயத்தில் எனது கருத்தைச் சிறிது கூறுவன்.

பத்தாவது வகுப்பு முடிய A குரூப்பில் அனைவரும் தமிழே ஓரளவு பயிலல் வேண்டும். வடமொழிகற்க ஆவலுள்ளோர் C குரூப்பில் அம்மொழியைப் பயிலலாம். அங்ஙனம் இயலாதவர் C குரூப்பிலும் தமிழையே கற்கலாம்.

3. 3 வது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்புவரை, தமிழ்ப் பண்டிதர்களே தமிழைப் போதித்தல் வேண்டும். உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் பாடம் தவிர ஏனைய பாடங்களை, அவ்வப்பாடங்களில் விசேடப்பயிற்சியுடையவரே பாடம் நடத்தல் வேண்டுமென்னும் சட்டம் புதுக்கல்வி முறையில் நிலவல் வேண்டும். இம்முறைப்படி 500-க்கு மேற்பட்ட மாணவர்களிருக்கும் ஓர் பள்ளியில் குறைந்தது மூன்று பண்டிதர்கள் இருத்தல் இன்றியமையாதது. இவ்வாறு நடைபெறின் மாணவர்களும் பேசும் ஆற்றலும் எழுதும் தின்னும் அடைவர்.

4. அறிவியற் பாடங்கள் அனைத்தையும் தமிழில் போதித்தல். சரித்திரம், பூகோளம், முதலிய பாடங்களைத் தமிழிலேயே போதிக்கச் செய்தல் வேண்டும். அங்ஙனம் போதிக்கும் ஆசிரியர்கள், போதிக்கும் பொழுது, கொச்சைத் தமிழை விடுத்து சிறந்த தமிழிலே பேசுதல் வேண்டும். ஏனென்றால், ஓர் மாணவன், ஓர் நாளில் ஒருமுறை 45 நிமிடங்கள் தமிழ் வகுப்பில் இருக்கின்றான். தமிழாசிரியரிடம் பழகுகின்றான். மற்ற நேரங்களில் மற்றைய ஆசிரியர்களிடமே வசிக்கின்றான். எனவே, இவர்கள் கொச்சைத் தமிழை யூட்டினால் அது அவர்கள் மனதிற் பதிந்து திருத்த முடியாத நிலைக்கு வந்து விடுகிறது. இளமையிற் கல்வி சிலையிலெழுத்தன்றோ. அன்றியும் இவ்வாசிரியர்கள் தமிழ் விடைத்தாள்களைத் திருத்தும் பொழுதும் இலக்கணப் பிழைகளையும், எழுத்துப் பிழைகளையும், நன்கு கவனித்தல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விடைத்தாள்களைப் பார்க்கும் பொழுது, எழுத்துப் பிழைகள், பார்க்கும் ஆசிரியர்கள் கண்களில் நன்கு உறுத்துகின்றன. தமிழிலோ அறிகிலன். எனவே, புதுக் கல்வி முறையில் இவவிஷயத்திற்கும் இடமளித்தல் வேண்டும்.

5. இலக்கிய வுணர்ச்சியைச் சோதிக்கும் வினாத்தாள்கள் அமைத்தல். இது போது வினாத்தாள்கள் தயாரித்தல் போலப் புதுக் கல்விமுறையில் தமிழில் வினாப் பத்திரங்கள் தயாரித்தல் கூடாது. என்னை? இப்பொழுது ஆக்கப்படும் வினாக்கள், மாணவர்களின் இலக்கிய உணர்ச்சியைப் பரிசோதிப்பதாயில்லை. செய்யுளைப் பொறுத்த மட்டிலுங்கூட அதன்

சுவையும்நயமும் கேட்கப்படுவதில்லை. செய்யுளின் நயத்தையறிந்து பாராட்டுந் திறமை மாணவர்க்கிருக்கின்றதா என்பதைப் பரிட்சகர்கள் கனவிலும் கருதுவதில்லை. சரித்திரம் பூகோளம் முதலிய பாடங்களிற் அக்பர் எவ்வாண்டிற் சிம்மாசனம் ஏறினர்? நைல் நதி எக்கண்டத்தில் உள்ளது? என்று கேட்கப்படுவது போல், தமிழிலும் கேட்கப்படுதல் பொருத்தமன்று. எடுத்துக் காட்டாக் கம்பன் அல்லது சேக்கிழார் எழுதிய செய்யுட்கள் பாடமாக வைக்கப்பட்டிருந்தால், அச்செய்யுட்களூடே சென்று கேள்விகள் கொடாமல், கம்பன் பிறந்த ஊர் எது? பெரிய புராணத்திற்கு முதனூல் எது? என்று கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன.

அன்பர்களே! இக்கேள்விகளிற் சிறிதேனும் இலக்கிய வுணர்ச்சியுண்டாவென்பதைச் சிந்தியுங்கள். ஆகவே, புதுக் கல்வி முறையில் தமிழுக்குரிய இடத்தில் இதுவும் இடம் பெறல் வேண்டும்.

தண்டமிழன்னையின் தவப் புதல்வர்களே!

இன்னும் தமிழுக்குரிய இடங்கள் பலவற்றைக் கூறலாம். விரிவஞ்சி விடுகின்றேன். ஈண்டுக் குழுமியிருக்கும் நீங்கள், ஆங்கிலமும், தமிழும் பயின்ற இரு மொழிப் புலவர்கள் தமிழன்னை, குழலும் முடியும் குலைந்து செங்கோலும் அரியணையும் இழந்து துச்சிற் கிடந்து துயருறுகின்றாள். அவள் மீண்டும் முடியும் செங்கோலும் பெற்று விளங்க வேண்டுமேல் நீங்கள் தமிழ் ஆர்வம் மிக்கவர்களாய் ஆதல் வேண்டும். மாணவர்களையும் இத்துறையில் ஆக்கல் வேண்டும். ஏனென்றால், நாட்டில் மிகுதியும் செல்வாக்குப் பெற்றிருப்பவர் ஆங்கிலங் கற்றவர்களே. அன்னார் பேச்சுக்கும் எழுத்துக்கும் நாடு மதிப்புக் கொடுக்கின்றது. அவருள் பெரும்பான்மையோர் தம்மைத் தமிழர் என்பதை மறந்திருப்பவர். சிலருக்கு மட்டும் தமிழ் நினைவுண்டு. இவர்கள் எழுதும் தமிழே பின்னைத் தமிழ் மொழி இலக்கியங்களாக விளங்கும். எனவே, நீங்கள் நன்கு தமிழ் கற்றவர்களாய் விளங்க வேண்டும். இரு மொழியிலும் வல்லவர்களாகிய நீங்கள் தமிழுக்குச் சிறந்த இடமளித்து தமிழை வளர்ப்பீர்கள் என எண்ணுகின்றேன்.

செந்தமிழ்ச் செல்வர்களே!

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் கேட்டருளிய உங்கட்கு எனது நன்றியறிதலைச் செலுத்தி நிறுத்துவல்.

தமிழ்த்தாய் வாழ்க.

(கோவை ஜில்லா ஆசிரியச் சங்கத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

பாலர் பாட புத்தகங்கள் சம்மந்தமான ஓர் ஆராய்ச்சி

(பி. சுப்ரமண்ய அய்யர், தியாகராஜநகர்)

தற்காலத்தில் எண்ணிறந்த பாலர் பாட புத்தகங்கள் நந்தமிழ் நாட்டின் கண் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் தமிழ்ப் பண்டிதர்களாலோ அல்லது ஆரம்பப் பாடசாலைச் சோதனையாளர்களாலோ எழுதப்பட்டவையாக இருக்கின்றன. பாலர் வகுப்பிடை நீண்ட கால வனுபவமுடையோரால் எழுதப்பட்ட புத்தகங்களைக் காண்டல் அறிதெனல் மிகை யாகாது.

தமிழில் பாலர் பாட புத்தகமொன்று எழுதக் கருதுவோரிடத்து பின் வரும் யோக்கியதைகள் அமைந்திருப்பது அத்தியாவசியமாகும்.

(1) குழந்தைகளின் மனோதத்துவ சாஸ்திரம் கற்றிருத்தல் முதலாவது யோக்கியதை யாகும்.

(2) பாலர் வகுப்பு உபாத்தியாயராகவே நீண்ட காலமிருந்து அனுபவ மடைந்திருத்தல் இரண்டாவதாகும்.

(3) ஆங்கில பாஷையில் பாலர் பாட புத்தகங்கள் எம்முறையைத் தழுவி நிற்கின்றன வென்று ஆராய்தலாலுண்டாகும் ஆழ்ந்த அறிவு பெற்றிருத்தல் மூன்றாவதாம் (பல விஷயங்களிலும் முன்னேற்ற மடைந்த நாடுகளுள் இங்கிலாந்து மொன்றாதலின் ஆங்கு தோன்றி வளரும் முறைகளிலிருந்து நாம் கிரகிக்கக் கூடிய விஷயங்கள் பல இருக்கக் கூடும்.)

(4) தமிழ் பாஷையின் தத்துவங்கள், விசேஷங்கள் வாக்கியங்களின் அமைப்புகள் ஆகிய இவைகளைக் கற்றுணர்ந்திருத்தலும் தமிழ்ப் பாஷை எவ்விதங்களில் ஆங்கிலத்தினின்றும் வேறுபாடு உடையதாக இருக்கிறதென்று ஆராய்ந்திருத்தலும் நான்காவது யோக்கியதையாகும்.

இந்நான்கு யோக்கியதைகளுள் ஒன்றிரண்டே இருப்பினும் பலர் பாலர் பாட புத்தகங்களெழுத முற்படுவது ஸகஜமாக இருந்து வருகிறது. அன்னோர் தம் பணப் பெருக்கினாலும், தாங்கள் வகிக்கும் ஸ்தானங்களின் அதிகார மிகுதியினாலும் விசேஷமான சந்தர்ப்பானுகூலம் பெற்றிருப்பதினாலேயேயே பாலர் பாட புத்தகங்களெழுதற் றொழிலை யெளிதில் மேற்கொள்ளுகின்றார்கள்.

உபாத்திமைத் தொழிலுக்குப் பயிற்சி தரும் கல்லூரிகளில் குழந்தைகளின் மனோ தத்துவ சாஸ்திரம் போதிக்கப்படுவது உண்மையே. ஆனால் குழந்தைகளின் மனோ தத்துவத்தைப் பற்றிப் படித்தறிந்த மேம்போக்கான வாசக ஞானத்தை, அவர்களோடு கூடிப் பழகி அனுபவ ஞானமாக மாற்றிக்கொண்டா லொழிய அவ்வறிவு பயன் படுவதில்லை.

147643
சென்னை-600 ...

தங்களுக்கு அமைந்திருக்கும் தொழிலின் இயல்பினால் இத்தகைய அனுபவம் பெற சந்தர்ப்பமும் அவகாசமும் வாய்க்கப் பெறாதவர் "இவ்வனுபவம் அடைதல் நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு கடினமா? அல்லது அநேக வருஷ கால உழைப்பினால் தான் பெற முடியுமோ? நாங்கள் அநேக குழந்தைகளுக்குக்குடித் தந்தையரல்லவோ? எங்கள் குழந்தைகளோடு கூடிப் பழகி நாங்களிவ்வனுபவ ஞானம் பெற்றிரோமோ? என்று வாதிக்கிறார்கள். இவ்வாதங்கள் ஏன் எழுதப்பட வேண்டிய புத்தகம் இருபது அல்லது முப்பது குழந்தைகள் கூடி இருக்கும் வகுப்பிற்கு ஏற்றதாக வல்லவா இருத்தல் வேண்டும்? ஆகையால் நீந்தக் கற்தபற்கு நீரில் இறங்கியே தீரவேண்டி இருப்பதுபோல் ஒரு வகுப்புக் குழந்தைகட்கு வேண்டியதை அவ்வகுப்பிலேயே இருந்து ஆராய்ந்து செய்தலே முறையாகும். பாலர் பாட புத்தகம் எழுத எனக்கும் யோக்கியதை யுண்டு என்ற ஒவ்வொருவரும் தத்தம் யுக்திக்குத் தோன்றியவாறு புத்தகங்கள் எழுதி விடுகிறார்கள். அனுபவம் பிரதானமே யொழிய யுக்தி பிரதானமன்று. ஒரு புத்தகாசிரியர் ஆலமரத்தைப் பற்றி ஒரு பாடம் சேர்த்திருந்தால் மற்றொருவர் வேப்ப மரத்தைப்பற்றி தன் புத்தகத்தில் எழுதுகிறார். புத்தகங்களுக்கிடையில் இத்தகைய வேற்றுமை காணப்படுகிறதே யொழிய போதனா முறையில் ஒன்றிற் கொன்று முற்போக் குடையதாகக் காணப் படுவதில்லை.

ஒவ் வொருவரும் தனக்குத் தோன்றும் ஒரு விஷயந்தான் பிரதான மென்று வாதித்து அதற்கிணங்க புத்தகம் எழுதுகிறார். இப்படிப் பலரால் பிரதானமென்று கருதப்படும் பல விஷயங்களையும் கீழே குறிக்கின்றேன்.

I எழுதுதலைக் கருத்திற் கொண்டவர்கள்.

(1) குழந்தைகட்கு வட்டங்கள் போடுவதைக் காட்டிலும், நேர்க் கோடுகள் வரைதலே எளிது ஆகையால் 'ப', 'ட' என்பன போன்ற நேர்க் கோடுகளாலாகிய எழுத்துக்களையே முதலில் கற்பிக்கவேண்டு மென்றொருவர் கருதுகிறார்.

(2) "ப" என்பது மூன்று நேர்க் கோடுகளாலும் 'ட' இரண்டு நேர்க் கோடுகளாலும் ஆகியவையாதலால் 'ப' கற்பிக்கப்படுமுன் 'ட' கற்பிக்கப்படவேண்டும் என்பது ஒருவர் கருத்து.

(3) எந்தக் குழந்தையும் சீமைச் சுண்ணாம்பு அல்லது பலப்பம் கிடைக்குங்கால் வளைய வளைய கோடுகள் இழுக்கிறதே யொழிய நேர்க் கோடுகள் வரைவதில்லை. ஆகையால் வட்டங்களால் ஆக்கப் பெற்ற எழுத்துக்கள் முதலில் கற்பிக்கப்படவேண்டும் என்று ஒருவர் நினைக்கிறார்.

II உச்சரிப்பை பிரதானமெனக் கொண்டவர்கள்.

(4) உச்சரிப்புக்கு எளியனவான எழுத்துக்களே ஆரம்பத்தில் போதிக்கப்பட உரியன வென்று ஒருவர் கருதுகிறார்.

JL
T15m21,N36PA N37.2.1-2

III மொழிகளைப் பிரதானமாகக் கருதுகிறவர்கள்.

(5) குழந்தைகள் முதலில் ‘அப்பா’, ‘அம்மா’, ‘மாமா’ என்பன போன்ற மொழிகளையே சொல்லத் தலைப்படுவதால் அவைகளே முதலில் போதிக்கப்படவேண்டும் என்று ஒருவர் சொல்லுகிறார்.

(6) குழந்தைகள் தங்கள் விளையாட்டில் உபயோகப்படுத்தும் பந்து, பம்பரம், பட்டம் முதலியவைகளின் பெயர்களையும், லட்டு, வடை முதலான மொழிகளையுமே துவக்கத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது ஒருவர் தீர்மானம்.

VI குழந்தைகளின் மனதை வசீகரித்தலிலே கவனம்செலுத்துகிறவர்கள்.

(7) படங்களைக் கொண்டு விளக்கக்கூடிய மொழிகளும் அம்மொழிகளுக்குத் தேவையான எழுத்துக்களுமே முதலில் போதிக்கப்படவேண்டும் என்று ஒருவர் தீர்மானிக்கிறார்.

(8) மிட்டாய் என்று ஒரு மொழி இருக்கிறது இதை உச்சரித்தாலே குழந்தைகட்கு வாயில் நீர் ஊறும். குழந்தைகளுக்கு இவ்வளவு பிரியமான வார்த்தையை படம்போட்டுத் தெளிவாக விளக்க முடியாதென்ற காரணத்தினால் விலக்குவது முறையோ? அன்று. ஆகையால் இப்படிப்பட்ட வசீகரமான மொழிகள்தான் ஆரம்பத்தில் கற்பிக்கப்பட யோக்கியமானவை என்கிறார் ஒருவர்.

(9) குழந்தைகளுக்கு அர்த்தம் விளங்காத மொழிகள் வெறுப்பை உண்டுபண்ணிவிடுமாதலால் அவைகளை விலக்குவது அத்தியாவசியம் என்கிறார் ஒருவர்.

V எழுதவும் படிக்கவும் பயிற்சி தருவதே முக்கியம் என்கிறவர்கள்.

(10) எந்தெந்த எழுத்துக்களைக் கொண்டு அதிகமாக மொழிகள் செய்து பழகலாமோ அப்படிப்பட்ட எழுத்துக்களை ஆரம்பத்தில் பயிற்றுவிக்கவேண்டுமென்று நினைப்பவர் ஒருவர்.

(11) குழந்தைகளுக்கு 5 எழுத்துக்கள் போதிக்கப்பட்டு ஆகியது என்று வைத்துக் கொள்வோம். அவ்வைந்து எழுத்துக்களைக் கொண்டு குழந்தைகட்கு அர்த்தம் விளங்கக்கூடிய மொழிகள் இரண்டேதான் செய்ய முடிகிறதென்று வைத்துக்கொள்வோம். குழந்தைகட்கு அர்த்தம் விளங்காத இரண்டு மொழிகள் அவ்வைந்து எழுத்துக்களைக் கொண்டே செய்யமுடியுமானால் ஏன் அவைகளை உபயோகிக்கக் கூடாது? அப்படி உபயோகப் படுத்துவதால் அவ்வைந்து எழுத்துக்களிலும் அதிகப்பயிற்சி குழந்தைகளுக்கு ஏற்படுமல்லவா? அர்த்தம் தெரியாமற்போனால் என்ன? எழுத்துக்கூட்டிப் படிக்கத் தெரிவது விசேஷபழக்கமல்லவா? என்று கேட்கிறார் ஒருவர்.

(VI) பழையமுறை யபிமானிகள்.

(12) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எல்லா எழுத்துக்களுக்கும் எந்த வரிசைக்கிரமம் ஏற்பட்டுள்ளதோ அது தவறாமலிருக்க வேண்டும் என்பது ஒருவர் அபிப்பிராயம்.

(13) முதலில் ‘அ’ என்ற உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும் பிறகு மற்றவையும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நினைக்கிறவர் சிலர். இவ்வகுப்பைச் சேர்ந்தவர் பெரும்பாலும் வரிசைக்கிரமத்தை அநுசரித்தாலும் சில இடங்களில் அதினின்றும் நழுவுகிறார்கள்.

பாலர் பாட புத்தகங்களுக்கு ‘புதிய’ ‘நூதன’ ‘நவீன’ என்பன போன்ற மொழிகள் சேர்க்கப்படுவதால் வியாபர்ரம் விருத்தியாகிறது போற்றோன்றுகிறது. வியாபாரக்குறி என்று சொல்லப்படுபவைகளுக்கு என்ன யோக்கியதையோ அதே யோக்கியதை தான் இப் பெயர்களுக்குமுண்டு. புத்தகவியாபாரம் மற்றெந்த வியாபாரத்தைக் காட்டிலும் எவ்விதத்திலும் வேறுபட்டதாகக் காணப்படவில்லை. ஒவ்வொரு வகையிலும் சரக்கு சிறிதாகிலும் பல இருந்தாற்றான் வியாபாரத்திற்குத் தோது என்று வியாபாரிகள் சொல்லுவதுண்டு. அதுபோல புத்தகப் பிரசுர கர்த்தாக்களுக்கு ஒவ்வொருவகையிலும் ஒவ்வொரு புத்தகவரிசை வேண்டுமாம். “உங்களிடத்தில் சரித்திரபுத்தகம் இருக்கிறதா? என்றொருவர் கேட்பின் “ஆஹா இருக்கிறது” என்று சொல்லவேண்டுமாம். அதுபோலவே தமிழ்ப் பாட புத்தகங்களில் இந்த வரிசை திருப்தியாக இல்லையே என்றொருவர் சொன்னால் “இந்த வரிசையைப் பாருங்கள் அல்லது இதைப் பாருங்கள்” என்று சொல்ல மூன்று அல்லது நான்கு வரிசைகளைசேர்ந்த புத்தகங்களை எடுத்துக் கொடுக்க வேண்டுமாம். அப்படி இருந்தாற்றான் வியாபாரம் சரிவர நடைபெறுமாம். ஆகையால் ஒரு கம்பெனியார் இரண்டு மூன்று ஆசிரியரிடமிருந்து பாடபுத்தக வரிசைகள் பெறுவதும் ஒரே ஆசிரியர் இரண்டு மூன்று கம்பெனிகளுக்கு பாடபுத்தக வரிசைகள் எழுதிக் கொடுப்பதும் சகஜமாக விருக்கிறது.

புதிதாக ஒரு புத்தகம் தோன்ற வேண்டுமானால் அதில் சிலாக்கியமான விஷயம் ஒன்றாவது புதிதாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனை இல்லையாதலால், ஒருபுத்தகத்தைப் போலவே அநேக வேறு புத்தகங்கள் எழுதுவதிலே ஆசிரியர்களும் பிரசுரிப்பதில் பிரசுரகர்த்தாக்களும் பரம திருப்தி யடைந்தவர்களா யிருக்கிறார்கள்.

பத்திராதிபர் கடிதப் பெட்டி

(இப்பகுதியில் ஆசிரியர்கள் தமது தொழில் பயிற்சி விஷயங்களைப் பற்றியும் தங்கள் குறைகளைப் பற்றியும் சுருக்கமான நிருபங்கள் அனுப்பித்தால் பிரசுரிக்கப்படும்.)

" வீண் செலவா விசேஷ சலுகையா "

ஐயா,

தற்போது படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையையும் அத் திண்டாட்டத்தை ஆசிரியர்கள் கூட எவ்வளவு தூரம் பகிர்ந்துகொள்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். நிலைமை இவ்வாறிருக்க அநேக ஜில்லா போர்டுகளில் பிரஸிடெண்டுக்கோ அல்லது ஏதாவதொரு மெம்பருக்கோ வேண்டிய போதனா முறைப் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு விசேஷ சலுகை காட்டி அவர்களையே, போதனாமுறை பயின்ற ஆசிரியர்கள் ஆயிரக்கணக்காய் இருப்பதையும் கவனியாமல், இன்னும் வேலைக் கமர்த்திக் கொள்கிறார்கள் என்பது எல்லோராலும் விரும்பப்படாததோர் விஷயமே. அதுவுமில்லாமல் நன்றாக முன்னுக்கு வரக்கூடிய பெரிய ஊர்களிலேயே இப்பயிற்சி பெறாத ஆசிரியர்கள் அமர்த்தப்படுகிறார்கள் என்பது இன்னும் அதிருப்திகரமான விஷயமே. அப்படியாயின் ஜில்லா போர்டு உத்தியோக மென்பது ஒருவர் படிப்பைப் பொறுத்ததா? நிலைமை இவ்வாறிருக்குமாயின் கல்வி எவ்வாறு பரவும்? மாணவர்கள் எவ்வாறு தேர்ச்சியடைவர். போதனாபயிற்சி பெறாத ஆசிரியர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களைப்போற் போதிக்க முடியுமா? நிலைமை இவ்வாறே மோசமாகிக்கொண்டே வருமாயில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கதிதான் என்னே? போதனா முறைப் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியின்போது சர்க்காருக்கு எழுதிக்கொடுக்கும் ஒப்பந்தப் பத்திரத்தை (Bond) எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

இது ஒரு விளையாட்டல்ல; எல்லோரும் நன்கு சிந்தித்துப்பார்க்க வேண்டிய விஷயம். ஜில்லா போர்டார்தான் இவ்வநீதிகளைச் செய்கிறார்களென்றால் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களுமா இதை ஆமோதித்து வாளாவிருத்தல் வேண்டும். தற்போதைய நிலையை அவர்கள் அறியாதவர்களா? ஏழை ஆசிரியர்கள் பால் இரக்கங் கொண்டு யார் இக்குறைகளை நீக்க முன்வரப் போகிறார்கள்? தென்னிந்திய ஆசிரியர் சங்கந்தான் முற்படுமா? ஆரம்பக்கல்வி அபிவிருத்தியிற் சிரத்தைகொண்ட கனம் கல்விடைரெக்டர் தான் இக்குறையை நீக்குவாரா? பாலர் கல்வியிற் சிரத்தைகொண்ட "பாலர் கல்வி" ஆசிரியராவது நமக்கு அநுதாபப்பட்டு இதைப் பிரசுரிப்பாரென்று நம்புகிறோம்.

இப்படிக்கு,
ஓர் ஏழை ஆசிரியன்.

குழந்தைகளின் கை வேலை

5. பூநூல் பந்துகள்.



நீங்கள் கிட்டிப்பந்து ஆடுகிற பூப்பந்துகளைப் பார்த்திருக்கிறீர்கள். உங்களுக்கு இவைகளைச்செய்துகொள்ளத் தெரியவேண்டாமா? தாங்களே செய்துகொண்டால் கடைவிலைக்கு அரைப்பங்குதான் இதன் கிரயம் அடங்கும்.

மூன்று அங்குல வட்டமுள்ள 2 வட்டங்களை சாதாரண அட்டையில் வெட்டிக்கொள், வட்ட அட்டையின் நடுவில் 1½ அங்குலம் வட்டமுள்ள ஒரு வட்ட துவாரம் செய்துகொள். கொஞ்சம் பூநூல் எடுத்து உன் கையில் சுற்றிக்கொள். உன் கையில் வளையங்கள் இரண்டையும் சேர்த்துப்பிடித்து நடுத்துவாரம் வழியாகப் பூநூலை வளையத்தில் சுற்றிவா. படம் 1-ஐ ப்பார். கையிலுள்ள பூநூல் போதாவிட்டால் மறுபடியும் கொஞ்சம் சுற்றிக்கொள். வளையத்தில் உள்ள துவாரம் ஒன்றாய் மூடுகிற வரையில் இம்மாதிரி நூலை சுற்றிக்கொண்டு வா. (படம் 2) நூலை நடு துவாரத்தின் வழியாகக் கொடுத்து சுற்றமுடியாத பக்ஷத்தில் ஒரு ஊசியில் நூலைக் கோத்துக்கொண்டு சுற்றிவா. கடைசியில் கையில் கொஞ்சம் நூல் எடுத்து சுற்றிக்கொண்டு A யில் காட்டியபடி ஒரு கெட்டி நூல் கொண்டு நன்றாக முடிபோடு (படம் 3) பிறகு அந்த முடிச்சை வளையத்தின் நடுவின் வழியாக பாதிதூரம் வருகிறவரையில் A கயிற்றைப் பிடித்துக்கொண்டு இழு (படம் 4) b c புள்ளிக் கோடு நெடுக வளையத்தின் ஓரமாக ஒரு கூரான கத்தி கொண்டு வெட்டு. படம் 5 ஐக் கவனி. உள்ளிருக்கும் அட்டைத்துண்டு ஒட்டுகிற வரையில் இம்மாதிரி வெட்டி வா. பிறகு இரண்டு வளையங்களுக்கு இடையே ஒரு கெட்டி கயிறு கொடுத்து (படம் 6 e f கவனிக்க) அதன் (g) நுனிகளை உன்னால் கூடுமானபடி கெட்டியாக முடி. இது மிகவும் முக்கியமானது. அட்டை வளையங்களை கிழித்தெறிந்துவிடு. இப்பொழுது ஒரு பூப்பந்து ஒருவிதமாகக் காணப்படும். ஒரு கூரான கத்தரிக்கோலால் இந்தப்பந்தை ஒரு நல்ல உருண்டையான பூப்பந்து மாதிரி காணும்படி கத்தரி.

குழந்தைகள் தூங்குகிற தொட்டிலின்மீது கண்ணாடி குளோப் மாதிரி இப்பூப்பந்துகளைத் தொங்கவிடலாம். இம்மாதிரி பந்துகளுக்கு நூல் அதிகம் வேண்டுவதில்லை. அதற்கேற்றவாறு வளையத்தின் நடுவில் சிறு துவாரங்களைச் செய்துகொள்ளவேண்டும்.

(All rights reserved)

கே. என். சாரி

பத்திராதிபர் குறிப்புகள்

மாகாணக் கல்வி மகாநாடு

தஞ்சையில் மேமாதத்தில் கூடிய கல்வி மகாநாட்டில், பல முக்ய ப்ரச்னைகளை விவாதித்து முடிவுக்கு வந்தது. திருச்சி ஜில்லா ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட ஆரம்பக் கல்வி திட்டமொன்று, மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கல்வியறியாமையை சீக்கிரத்தில் ஒழிப்பதேயாம். கட்டாய இலவசக் கல்விவசதி எல்லா கிராமங்களிலும் உண்டுபண்ண வேண்டிய தவசியம் என்பதே இத்திட்டத்தின் கொள்கை. தவிர, ஆசிரியர்களின் பல கஷ்டங்களை நிவர்த்திக்கும் முறைகளையும், ஆசிரியர்களுக்கு தகுந்த உபகாரச் சம்பளம், பாக்கியில்லாமல் கொடுக்கப்படவேண்டும் அவசியத்தையும் இத்திட்டத்தில் காட்டியிருப்பது. மகாநாட்டில் நிறைவேறிய மற்றொரு தீர்மானம், ஆரம்ப ஆசிரியர்களின் பல கஷ்டங்களையும் குறைகளையும் காட்டிய சங்கத்தாரால் தயாரித்த ஒரு அறிக்கையை யொட்டி, கவர்ன்மெண்டார் இவைகளை விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தியது. தலைவர் ஸ்ரீமான் ராஜாஜி, ஆரம்ப ஆசிரியர்கள் நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவுகளைக் கேட்டு ஆசிரியரின் பல கஷ்டங்களை நன்கு உணர்ந்தார் என்பதற்கு ஐயமில்லை. அவரது அனுதாபத்தைத் தெரிவித்ததுமில்லாமல், தனது பிரசங்கத்தில் ஆசிரியர்களுக்கு தம்மாலியன்ற உதவி புரிவதாகக் கூறி, தத்தம் குறைகளை ஆசிரியர் ஒன்று பட்டு, சங்கங்கள் மூலமாய் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுவது அவசியம் என்பதை நன்கு விளக்கினர். ஆரம்ப ஆசிரியர் புரியும் தொண்டு மிகச் சிறந்த தேசியத் தொண்டு. கிராம புனர் உத்தாரணத்துக்கு முக்கியமானவர் கிராம ஆசிரியராவர் அல்லவா? இதை எல்லாரும் அறிவார். ஆகவே, ஆசிரியர்களுக்கு தம் தொண்டுக்கேற்ற சம்பளம் கொடுத்தும், தம் தொழிலைச் சரிவர செய்ய ஏற்ற வசதிகளையும் அவர்களுக்கு அளித்து உபகாரம் செய்ய வேண்டுவது மிக அவசியம்.

இம்மகாநாடு கூடுவதற்கு முன்பு தொழிற் பயிற்சி புதுப்பிக்கும் வகுப்பு ஒன்று, வரவேற்புக் கமிட்டியாரால் நடைபெற்றது. நமது நண்பர் ஸ்ரீமான் ஜெகன்னாதன் அவ்வகுப்பை மிக ஊக்கத்துடன் நடத்தி வைத்தார். சுமார் 60 ஆசிரியர்கள் பயிற்சிபெற்றனர். இவ்வாசிரியர்களால் தயாரிக்கப்பட்ட பொருட் காட்சியைக் கண்ணுற்று பலர் மகிழ்ந்தனர். இதுபோலவே, ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் தொழில்,பயிற்சியில் ஊக்கம் காண்பித்தால் ஆரம்பக் கல்வி முன்னேற்ற மடையும் என்பதற்கு ஐயமுண்டோ! அதிகாரிகளும் இதை அறிந்துளர் போலும். சென்ற மே மாதத்தில் விழுப்புரத்திலும், கூடலூரிலும், தென் ஆர்க்காடு ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீமான் என். சாரங்கபாணி அய்யங்கார், மிகச் சிறப்புடன் தொழிற் பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்தார். இவ் வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 100 ஆசிரியர்கள் பயிர்ச்சி பெற்றனர். கல்வி முறையில் தேர்ச்சி பெற்ற பல பெரியார் சொற்பொழிவு நிகழ்த்தியது மல்லாமல், ஆசிரியர்கள் தங்கள் வேலையை உயர்ந்த முறையில் செய்வதற்கு வேண்டிய பயிர்ச்சியையும் அடைந்தார். தென் ஆர்க்காடு ஜில்லா கல்வித் தலைவர் செய்வதுபோல் ஒவ்வொரு ஜில்லாவிலும் இம்மாதிரியான பயிர்ச்சி வகுப்புக்கள் நடக்கப்படுமென்று கருதுகிறோம்.

நமது கல்வி இலாகாத் தலைவர்

நமது கல்வி இலாகாத் தலைவர் கனம் ஸ்டாதம் துரை அவர்கள் ஜூன் மீ 5வ யன்று கொட்டயத்தில், ஆரம்ப ஆசிரியர்கள் விஷயமாக ஓர் பிரசங்கம் செய்தார். கள்ளிக் கோட்டையில் கூடிய மலையாள ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டில் ஆசிரியர்களின் துயரங்களை வெளிப்படையாய் எடுத்துரைத்து, இக்குறைகளை நீக்காவிடில் ஆசிரியர்கள் வேலை திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும் என்றதோர் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இதிலிருந்தும், மற்றைய ஆசிரியச் சங்கங்களிலும் அடிக்கடி ஆசிரியர்களின் கஷ்டங்கள் பலவற்றைப்பற்றி அடிக்கடி பேசியுள்ளது டைரெக்டருக்கு தெரிந்ததே. ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தையே கருத்தாகக்கொண்ட அவர் இக்குறைகளை தீர்ப்பது அவசியமென்று நன்குணர்ந்தார். சம்பளம் சரிவர கொடுக்கப்படுவதைப்பற்றி

யும், ஆசிரியர்களைக் காரணமில்லாமல் வேலையைவிட்டு நீக்காமலிருப்பதற்கும் கவர்ன்மெண்டாரால் விதிகள் ஏற்படுத்தப்படுமென்பதை அவர் ஆசிரியர்களுக்கு அறிவித்ததை மிகப்பாராட்டத் தக்கதே. இதுகாறும், ஆசிரியர்கள் தங்கள் துயர்களை கவனிக்க ஒருவருமில்லையே என்று ஏங்கி நின்றனர். துரைத்தனத்தாருக்கு இது தெரிந்திருப்பதும், அவர்கள் அக் குறைகளை நீக்குவது அவசியம் என்றுஉணர்ந்து விதிகள் தயாரிக்கிறார்கள் என்பது கண்டிப்பாய் ஆசிரியர்களுக்கு உற்சாகம்தரக் கூடியது.

ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ஆசிரியர்கள் பலரை ஓரிடம் விட்டு ஓரிடத்திற்கு அடிக்கடி காரணமில்லாமல் மாற்றப்படுவதும் அப்படி மாற்றிபோகும் பொழுது, ஏற்படும் செலவை இந்த ஸ்தாபனங்கள் கொடுக்காமலிருப்பதும் மிகச் சாதாரணமானது. டைரக்டர், மேற்சொல்லிய பிரசங்கத்தில், துரைத்தனத்தார் இவ்விஷயத்தையும் கவனித்து, மாற்றுதலைக் குறைக்கவும் மாற்றுதலால் ஏற்படும் செலவுக்கு உதவிபுரியவும் சட்டங்கள் ஏற்பாடு செய்யப்போகிறார்கள் என்று கூறியுள்ளதும் மிக பாராட்டத் தக்கது. ஆசிரியர்கள் தமமாலியன்ற வரையில் தமது தொழிலை செவ்வனே புரிவர் என்பதை நாம் துரைத்தனத்தாருக்கு உறுதியாய்ச் சொல்லக்கூடும் என்று நம்புகிறோம்.

JL
T15 M21,N361A
N37.2.1-2
147642
சென்னை-600 008.

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

The Coronation English Readers

Edited by Prof. J. C. ROLLO, M.A.
Principal, Maharaja's College, Mysore

Primer, Part I	(3rd Class)	Annas 3
Primer, Part II	(4th Class)	Annas 3
Primer, Parts I & II		Annas 6
Book I	(5th Class)	Annas 6
Book II	(1st Form)	Annas 8

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

B. G. PAUL & Co., Educational Publishers
12, Francis Joseph Street, G.T., MADRAS

Children's Everyday Science in Tamil

FOR FORMS II & III EACH AS. 12.
BY M. S. SUBRAMANIAN.
TEACHER, HINDU SECONDARY SCHOOL, VIRANALLUR S.I.RY.

Neatly got up, conforming to the latest syllabus in General Science, in elegant and flowing Tamil, with rare photographs, pictures, and diagrams in profusion, in bold print, highly inviting to young children, and appreciated by eminent educationists, scholars, scientists, etc., etc.

Sir C. V. Raman, Director, Indian Institute of Science, Bangalore, writes............have been very favourably impressed with the variety of the materials and the freshness of the treatment..........

Mr. M. S. Sabhesan, M.A., Professor of Botany, Christian College, Madras, writes........ One can have no doubt about the merit of a school book if the pupil for whom it is intended is absorbed in its study and disinclined to part with it. This is just what I saw in the case of the series, "Childrens's Everyday Science" brought out by Mr. M. S. Subramaniam.........is well planned and the topics are clearly explained.........

Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.

English Conversation Book I	for Class IV
do. do. Book II	do. V
Arithmetic for Beginners	in Tamil
Domestic Hygiene	in Tamil
Stories from Indian History	for Class V
Tamil Primer for Beginners ...	... ...

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER *(Retired Teacher)*
2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.

A GUIDE TO

ELEMENTARY SCHOOL TEACHERS

By **Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.**
with a foreword by **D. S. REDDI, M.A. (*Oxon.*)**

English Edn.] 178-pp. with 45 Illustrations [Price Re. 1

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

G. SRINIVASACHARI & SONS,
EDUCATIONAL PUBLISHERS,
Narasingapuram Street —— Mount Road, Madras.

***N.B.*—Tamil Edition—in the Press**

தென் இந்திய ஆசிரியர்
ஐக்கிய காப்பு நிதி

ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் —

— ஐக்கியமும் பெருகும்

ஒன்பது வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.

உடனே சேருங்கள்

— *மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம்.* —

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ். கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras